AHARAM

# அகரம்

தரம் 5 - 11 வரை எண்: 10 எழுத்து: 01 ஜனவரி - 2016 www.aharam.lk



## புதிய கல்வியாண்டில் திட்டமிட்டு வெற்றி பெறுவோம்

Des: Deltota Harees

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மெஸ்டா

# வெளிவந்துவிட்டது

## மெஸ்டாவின் புதிய வெளியீடுகள்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்ட மாணவர்களுக்காக




## 2016 முதலாம் தவணைப் பரீட்சை வழிகாட்டி








**எமது வெளியீடுகளை புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.**
**மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்**

Mesda
Since 1999
Printing & Publications


**MESDA PUBLICATIONS PVT (Ltd).**
**217/2, RAMBUKKANA ROAD, MAWANELLA.**
**Tel : 0352241490, 0714429820**
**E-mail: mesdamawanella@yahoo.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



06

"அல்லாஹ்வின் படைப்புகள் அனைத்திலும் மனிதனுக்கு ஏராளமான படிப்பினைகள் காணப்படுகின்றன. அப்படைப்புகளிலிருந்து கால்நடைகளைக் குறிப்பாக்கி அவற்றிலும் படிப்பினைகள், அத்தாட்சிகள் உள்ளன என்பதைத்தான் மேலே உள்ள திருமறை வசனம் குறிப்பிடுகின்றது. கால்நடைகள் எனும் போது ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற விலங்குகள் குறிப்பாக உள்ளடங்குகின்றன."




38



22



32



30

AHARAM அகரம்

எண்: 10 - ஜனவரி: 2016 - எழுத்து: 01




## பாடத்திட்டம்



| | |
|---|---|
| புலமைப்பரிசில் | 40 |
| அறபு மொழி | 14 |
| வரலாறு | 20 |






36

பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd
(அதிபர், களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை)

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

பொறுப்பாசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

தொடர்புகளுக்கு:

அகரம்
77, தெமடகொட வீதி
கொழும்பு 09
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : editor@aharam.lk

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |

PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்வியாண்டில் புதிதாய் தடம் பதிப்போம்...

மாணவர்கள் தனது கல்வி வாழ்க்கையில் சந்திக்கும் ஒவ்வொரு கணப்பொழுதும் கனதிமிக்கவை. ஒவ்வொரு புதிய கல்வியாண்டிலும் ஒவ்வொரு வகுப்பறையும் தாண்டி பாடசாலை நாட்கள் கடந்து செல்லும்போது அது மாணவர்களின் இலட்சியத்தை வடிவமைப்பதாய் அமைதல் வேண்டும். கடந்த வருடத்தை விடவும் சந்திக்கும் வருடம் புதிய சிந்தனைகள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள், திட்டமிடல்களுடன் பல வெற்றிக்கான அடையாளங்களும் வெளிப்பட வேண்டும். அவ்வாறு ஒழுங்கு முறையில் எமது பாடசாலை நாட்கள் நகரும்போதே எமது இலக்கு வெற்றியை நோக்கி நகரும். இல்லையேல் இது இடைநடுவில் திசைமாறி எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி விடும்.

எனவே, புதிய வகுப்புக்களுக்குள் கால் பதித்திருக்கும் இன்றைய நாட்களில் தன்னம்பிக்கையையும் சாதிக்கும் மனோநிலையையும் உள்ளத்தில் ஆழமாக பதித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறான உறுதியுடன் பயணிக்கையில்தான் வெற்றிகள் எம்மை வந்தடையும். வரலாற்றில் சிறிய மாற்றங்களின் மூலம் உலகை மாற்றிய எத்தனையோ சாதனையாளர்கள் எமக்கான படிப்பினையாளர்களாக இருக்கின்றனர்.

ஆசியாக் கண்டத்தில் மாத்திரமல்லாது உலகில் அபிவிருத்தியில் உச்சத்தில் இருக்கும் ஒரு தேசம் தான் ஜப்பான். இரண்டாம் உலகப் போரில் உருத் தெரியாமல் சிதைந்துபோன ஒரு தேசம் அது. உலக நாடுகளின் எல்லைக்குள் நுழைந்து முரண்பாடுகளை தோற்றுவித்ததன் விளைவாக, அமெரிக்கா அணு குண்டுகள் மூலம் பதிலடி கொடுத்தபோது இனி பல தலைமுறைகளுக்கு அந்த தேசம் தலைதூக்க முடியாது என்றுதான் உலகம் எண்ணியது. ஆனால் போரில் தோற்றாலும் பொருளாதாரத்தில் தோற்க விரும்பாத ஜப்பானியர்கள் தன்னம்பிக்கையையும் உழைப்பையும் உரமாக விதைத்தனர். ஜப்பானிய மண்ணில் ஒரு சில தலைவர்கள் மட்டுமல்ல, முழு தேசமே தன்னம்பிக்கையோடு எழுந்து நின்று போர்முனையில் காட்டிய வேகத்தை விட நாட்டை மறுசீரமைப்பதில் அதிக வேகத்தை காட்டினார்கள். விளைவு 30 ஆண்டுகளுக்குள் அமெரிக்காவுக்கு நிகரான பொருளாதார வல்லரசாக உருவெடுத்தது ஜப்பான். இன்று எல்லாத்துறைகளிலும் ஒரு முன்மாதிரி நாடாகவும் மாறியிருக்கிறது.

இவ்வாறான வியத்தகு மாற்றத்துக்கு வித்திட்டவர்கள் பலர் இருந்தாலும் ஒருவரின் பெயரை ஜப்பானிய வரலாறு மட்டுமல்ல, உலக வரலாறும் என்றென்றும் போற்றும். Made in Japan என்ற வாசகத்தை தாங்கி வரும் எந்த பொருளையும் கண்ணை மூடிக்கொண்டு வாங்கும் அளவுக்கு உலக மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றால் அதற்கு முழுமுதற் காரணம் அந்த சாதனையாளர்தான். அவர்தான் தரக்கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தையும் SONY என்ற புகழ்பெற்ற நிறுவனத்தையும் உலகுக்கு தந்த ஜப்பானிய தொழில் அதிபர் அக்யோ மொரிட்டா ஆவார்.

இவர் பாடசாலைக் காலங்களிலேயே எப்போதும் எதனையும் புதிதாய் செய்ய வேண்டும் என எண்ணுவார். வகுப்பறை பாடவேளைகளிலும் புதிய கண்டுபிடிப்புக்கள், சிந்தனைகளை முன்வைப்பவராகவும் இருந்தார். சிறுவயது முதலே மின்னியல் பொருள்களை அக்கு வேறு ஆணி வேறாக கழற்றி மீண்டும் பொருத்திப் பார்ப்பதில் அலாதி பிரியம் மொரிட்டாவுக்கு இருந்தது. எனவேதான், மாணவராக இருந்த காலத்தில் அவரின் ஈடுபாடு, விருப்பங்கள், ஆசைகள் என்பனவே அவரை எதிர்காலத்தில் ஜப்பான் நாட்டின் தலைவிதியை மாற்றிய சாதனையாளராக இடம்பிடிக்கச் செய்தது. பாடசாலையில் கணிதமும் இயற்பியலும் அவருக்கு மிக பிடித்த பாடங்களாக மாறின. காரணம் அவரது பாடசாலை சூழல், அவரின் விருப்பங்கள் என்பன இத்துறையில் அதிகமாக காணப்பட்டது. எனவேதான், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்துவிட்டு ஒசாக்கா இன்டீரியல் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து இயற்பியலில் பட்டம் பெற்றார். எனவேதான் ஜப்பானின் சரித்திரத்தை மாற்றிய அந்த புத்தாக்க சிந்தனைக்கும் காரணமாக அமைந்தார்.

எமது வாழ்க்கையின் ஒரு முக்கிய கட்டமே மாணவர் பருவம். அதனை சரியான முறையில் வடிவமைத்துக் கொள்வது எமது கரங்களிலேயே அதிகம் தங்கியிருக்கிறது. எதிர்காலத்திற்காக நோக்கங்களை அழகான முறையில் மனதிற் பதித்து, எமது முயற்சிகளை சீராக மேற்கொள்ளும்போது நிச்சயமாக நாமும் சிறந்த சாதனையாளராக மிளிர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

أَبُو سَعِيدٍ الْخُدْرِيِّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّه صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ مَن رَأَى مِنْكُمْ مُنْكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِقَلْبِهِ وَذَلِكَ أَضْعَفُ الْإِيمَانِ (صحيح مسلم)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற தான் செவிமடுத்ததாக அபூ ஸஈத் அல்குத்ரிய்யி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "உங்களில் யார் ஒரு பாவத்தைக் காண்கின்றாரோ அவர், அப்பாவத்தை தனது கரத்தால் தடுக்கட்டும்; அதற்கு அவருக்கு முடியாவிட்டால் அவர் தனது நாவினால் தடுக்கட்டும்; அதற்கும் அவருக்கு முடியாவிட்டால் அவர் தனது உள்ளத்தால் அப்பாவத்திலிருந்து தவிர்ந்து கொள்ளட்டும். அதுவே ஈமானின் தாழ்ந்த நிலையாகும்." (முஸ்லிம்)

இஸ்லாம் மனித வாழ்வின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் பீறிடச் செய்யும் அருள் ஊற்றாகும். அது அழகிய போதனைகளாலும் மேலான வழிகாட்டல்களாலும் மனித கண்ணியத்துக்கு மாண்பைப் பெற்றுக் கொடுக்கின்றது.

இஸ்லாத்தின் அழகிய வழிகாட்டல்களில் ஒன்றை அல்லாஹ்வின் தூதரவர்கள் மேற்படி ஹதீஸில் கற்றுத் தந்துள்ளார்கள். அதுவே ஒரு மனிதன் பாவமான ஒரு செயலைக் கண்டால் அது தொடர்பாக எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதாகும்.

இங்கு நபியவர்கள் காட்டித் தந்துள்ள வழிகாட்டல் மனித சக்தியை கவனத்திற் கொண்டு சொல்லப்பட்டாலும், மனிதன் பாவங்களை சமூகத்திலிருந்து களைந்தெறிவதில் கொண்டிருக்க வேண்டிய உறுதியை தெளிவுபடுத்துகின்றது.

இவ்வாறாக பாவத்தைக் களைந்து நன்மையின் பால் மனிதர்களுக்கு வழிகாட்டுவது ஒவ்வோர் இறைவிசுவாசியின் மீதுள்ள கடமையாகும். அதனால்தான் அல்லாஹ் எம்மை சிறந்தவர்கள் என புகழ்ந்து கூறுகின்றான்.

*''மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். (ஏனெனில்) நீங்கள் நல்லதை ஏவி, தீமையை விட்டும் மக்களைத் தடுத்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கையும் கொள்கிறீர்கள்.'' (03: 110)*

இவ்வசனத்தில் அல்லாஹ் ஈமானைவிட நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதை முற்படுத்தி இருப்பதானது, அதன் அவசியத்தின் ஆழத்தை தெளிவுபடுத்துகின்றது. இன்று நாம் வாழ்கின்ற சூழலில் கைகளால் தடுத்தும் தீராத தீமைகள் நிறைந்து காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

அதிலும் குறிப்பாக, இளம் சிறார்களான பாடசாலை மாணவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகிக் கொண்டு செல்கிறார்கள் என்ற விடயம் இன்று பேசுபொருளாக நாட்டின் பல பகுதிகளிலும் மாறியிருக்கிறது.

போதைப் பொருட்கள் இளம் சமூகத்துக்கு மத்தியில் ஊடுருவிக் காணப்படுகின்றமை எமது சமூகத்தினதும் நாட்டினதும் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கியுள்ளது.

இப்பாரிய பயங்கரத்தைக் கண்டும் நாம் அலட்டிக் கொள்ளாது விட்டால் அதனால் ஏற்படும் பேரழிவுக்கு நாமும் இலக்காக வேண்டியேற்படும். இதற்கு சிறந்ததோர் உதாரணத்தையும் நபியவர்கள் சொல்லிக் காட்டியுள்ளார்கள்.

கடலிலே இரண்டு தட்டுக்களைக் கொண்ட கப்பலில் பயணிக்கின்ற பிரயாணிகளுள் கீழ் தட்டிலுள்ளவர்கள் அடிக்கடி மேலே சென்று தண்ணீர் பெற்று வருவதன் சிரமத்தைக் கருத்திற் கொண்டு தமக்குக் கீழேதான் பெரும் சமுத்திரம் உண்டென எண்ணி கப்பலைத் துளைக்க முனைகின்றனர். இச்செயலை மேற்தட்டில் உள்ளவர்களும் பார்த்துக் கொண்டிருந்தால் இறுதியில் இரு தரப்பாருமே கடலில் மூழ்கும் நிலை ஏற்படும்.

அதேபோன்றுதான் முன்வந்த நபிமார்களின் கூட்டத்தில் சிலர் தீமை புரிந்து கொண்டிருந்தார்கள்; மற்றவர்கள் அத்தீமையை அலட்டிக் கொள்ளாது விட்டிருந்ததார்கள். இதனால் அந்த சமுதாயத்தவர் அனைவரும் அழிக்கப்பட்டதை நாம் வரலாறுகளின் ஊடாக அறிகின்றோம்.

தீமையை விட்டும் மக்களைத் தடுக்கும் மகத்தான பணியை ஸஹாபாக்கள் செவ்வனே செய்தார்கள். அத்தோடு இந்த உலகத்தில் கண்ணியமிக்க, ஏனைய மக்களுக்கு முன்மாதிரியான மக்களாக வாழ்ந்து காட்டினார்கள்.

எனவே, நாமும் எம் சமூகத்திலும் மாணவர் மத்தியிலும் அதிகரித்துச் செல்கின்ற தீமைகளை இல்லாதொழிக்கப் பாடுபட்டு நபிகளாரின் ஹதீஸை வாழ்வில் நடைமுறைப் படுத்தியவர்களாக மாற முயற்சிப்போம்.

*''மேலும், மக்களை நன்மையின் பக்கம் அழைப்பவர்களாகவும் நல்லதைக் கொண்டு ஏவுபவர்களாகவும் தீயவற்றிலிருந்து தடுப்பவர்களாகவும் உங்களில் ஒரு கூட்டத்தார் இருக்கட்டும். இன்னும் அவர்களே வெற்றி பெற்றோராவர்.'' (03: 104)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தில்: ஸனீயாஸ்னைன் கான் (இந்தியா)
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்

குர்ஆனிய களஞ்சியம்

தொடர் 05

# அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள நபிமார்கள்

### 1. ஆதம் (அலை)


அல்லாஹ் முதல் மனிதனாக ஆதம் (அலைஹிஸ் ஸலாம்) அவர்களை மண்ணினால் படைத்து அனைத்தையும் பற்றிய தெளிவான அறிவை அவர்களுக்கு வழங்கினான். ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் துணைவியாக ஹவ்வா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களையும் படைத்து, அவ்விருவரையும் சுவர்க்கத்தில் உண்டு மகிழுமாறு கட்டளையிட்டான். ஆனால், அவர்களை ஷைத்தான் வழிகெடுத்தான். அல்லாஹ்வினால் தடை செய்யப்பட்ட மரத்திலிருந்து பழம் ஒன்றை உண்ணச் செய்தான். இதனால் அவ்விருவரையும் அல்லாஹ் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றி பூமிக்கு இறக்கினான். நல்வழியைப் பின்பற்றுவோர் சுவர்க்கத்தில் நுழைவார்கள் எனவும் ஷைத்தானிய வழியைப் பின்பற்றுவோர் நரகில் தண்டிக்கப்படுவார்கள் எனவும் கட்டளையிட்டான்.

### 2. ஈஸா (அலைஹிஸ்ஸலாம்)

மர்யம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் கணவனின்றி குழந்தை பெற்றுக் கொண்டபோது சமுதாய மக்களால் இழிவாக பேசப்பட்டார். அப்போது அந்தக் கைக்குழந்தையை மக்கள் மத்தியில் அல்லாஹ் பேசச் செய்து அனைவரையும் வாயடைக்கச் செய்தான். ''நிச்சயமாக நான் அல்லாஹ்வுடைய அடியானாக இருக்கின்றேன். அவன் எனக்கு வேதத்தைக் கொடுத்திருக்கின்றான். இன்னும், என்னை நபியாக ஆக்கியிருக்கின்றான்'' (19:30) என அக்குழந்தை பேசியது. மேலும், அல்லாஹ் அவருக்கு குருடர்களையும் நோயாளிகளையும் குணப்படுத்தும் ஆற்றலையும் இறந்தவர்களை உயிரூட்டும் ஆற்றலையும் வழங்கினான். இறை நிராகரிப்பாளர்கள் ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை சிலுவையில் அறைந்து கொலை செய்ய முயற்சி செய்தபோது அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றினான். வேறொருவனையே சிலுவையில் அறைந்து இறை நிராகரிப்பாளர்கள் கொலை செய்தனர்.

### 3. யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்)

யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தமது சமுதாய மக்கள் ஒரே இறைவனை வழிபட நிராகரித்தபோது ''அல்லாஹ்வின் சாபம் அவர்கள் மீது உண்டாகட்டும்'' எனக் கூறி சிறிய படகு ஒன்றில் தம்மை பின்பற்றுவர்கள் சிலருடன் அந்நகரத்தை விட்டும் வெளியேறிச் சென்றார். கடலில் சென்று கொண்டிருக்கும்போது பாரிய புயல் ஒன்றை படகு எதிர்நோக்க வேண்டியேற்பட்டது. படகில் இருந்தவர்கள் யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் சாபமே இதற்கு காரணம் என கருதி யூனுஸ் (அலைஹிஸ் ஸலாம்) அவர்களை படகை விட்டும் வெளியேற்றி கடலில் தள்ளினர். அப்போது யூனுஸ் (அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் மிகப் பெரிய மீன் ஒன்றினால் விழுங்கப்பட்டார்கள். அம்மீனின் வயிற்றினுள் இருந்தவாறு தமது செயலை எண்ணி வருந்தினார்கள். இறை நிராகரிப்பாளர்களை அழித்து விடுமாறு வேண்டியதையும் அச்சமூகத்தினரை விட்டு விலகியதையும் சொல்லிக் காட்டி இறைவனிடம் மன்




னிப்புக் கோரினார்கள். அவர்களின் பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை மீனின் வயிற்றிலிருந்து வெளியேற்றினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்)

ஈராக் நாட்டில் பிறந்த இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் சிலை வணக்கத்தை வெறுத்தார்கள். ஒரே இறைவனே எனும் கொள்கையை பரப்பினார்கள். இதனால் அந்நாட்டு மன்னன் நம்ரூத் சினமுற்று இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை கொலை செய்யத் தீர்மானித்தான். மன்னனின் அச்சுறுத்தலுக்கு அடிபணியாத இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தமது பிரசாரத்தை நாடெங்கும் தொடர்ந்தார். அங்கிருந்து சிரியா, பலஸ்தீன், எகிப்து நாட்டுக்கும் சென்று ஓரிறைக் கொள்கையை பரப்பினார். இறுதியில் மக்கா நகரில் மனைவி ஹாஜரா மற்றும் மகன் இஸ்மாயில் ஆகியோரை விட்டுச் சென்றார். பின்னர் அல்லாஹ்வின் ஆணைக்கிணங்க மகன் இஸ்மாயில் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடன் சேர்ந்து இறை இல்லம் கஃபாவைக் கட்டினார்.



## 6. சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்)

தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகனான சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் ஜெரூசலம் நகரை ஆட்சி செய்தார்கள். அவர்களுக்கு அல்லாஹ் காற்றையும் ஜின்னையும் வசப்படுத்திக் கொடுத்தான். மேலும் பறவைகள், மிருகங்கள், பூச்சிகள் என்பவற்றின் மொழிகளை அறியும் ஆற்றலையும் அல்லாஹ் சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு வழங்கினான். அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்திய வண்ணம் இருந்தார்கள். ஒரு முறை ஹுத்ஹுத் எனும் பறவை ஸபா நாட்டு அரசி பல்கீஸ் பற்றி சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களிடம் செய்தி கொண்டு வந்தது. சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அந்நாட்டு அரசிக்கு இஸ்லாம் பற்றிய விரிவான விளக்கத்துடன் கடிதம் எழுதினார்கள். இதன் பின்னர் அந்நாட்டு அரசியும் மக்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

## 5. யூஸுஃப் (அலைஹிஸ்ஸலாம்)

கனான் பிரதேசத்தில் வாழ்ந்த யாஃகூப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகன் யூஸுஃப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் சிறுவயதில் பொறாமை கொண்ட தனது சகோதரர்களால் பாழடைந்த கிணறு ஒன்றில் தள்ளப்பட்டார். எனினும், அவ்வழியாகச் சென்ற வியாபாரக் கூட்டத்தினர் யூஸுஃப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைக் காப்பாற்றி தம்முடன் அழைத்துச் சென்றனர். எகிப்தில் அடிமையாக இருந்த யூஸுஃப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் ஒரு முறை மன்னரின் கனவுக்கு விளக்கம் சொல்ல அழைக்கப்பட்டார். யூஸுஃப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது அழகிய விளக்கத்தால் கவரப்பட்ட மன்னர் அவரை தானியக் களஞ்சிய அதிகாரியாக நியமித்தார். பிற்காலத்தில் தனது தந்தையை இனங்கண்டு தந்தையையும் சகோதரர்களையும் தன்னுடன் அழைத்துக் கொண்டார்.

## 7. மூஸா (அலைஹிஸ்ஸலாம்)

இஸ்ரவேல் மக்களுக்கு ஓரிறைக் கொள்கையை போதிக்க மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களும் அவரது சகோதரன் ஹாரூன் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களும் எகிப்திய மன்னன் பிர்அவ்ன் மற்றும் அவனது மக்களால் பெரிதும் துன்பத்திற்கு ஆளானார்கள். இறுதியில் தன்னைப் பின்பற்றுவோருடன் எகிப்தை விட்டு வெளியேறுமாறு அல்லாஹ் மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு கட்டளையிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com

# பால் தரும் பசுக்கள்

"நிச்சயமாக உங்களுக்கு கால்நடைகளிலும் (தக்க) படிப்பினை இருக்கின்றது. அவற்றின் வயிற்றிலுள்ள சாணத்திற்கும் இரத்தத்திற்கும் இடையிலிருந்து கலப்பற்ற பாலை அருந்துபவர்களுக்கு இனிமையானதாக (தாராளமாகப்) புகட்டுகிறோம்."

*(16: 66)*

அல்லாஹ்வின் படைப்புகள் அனைத்திலும் மனிதனுக்கு ஏராளமான படிப்பினைகள் காணப்படுகின்றன. அப்படைப்புகளிலிருந்து கால்நடைகளைக் குறிப்பாக்கி அவற்றிலும் படிப்பினைகள், அத்தாட்சிகள் உள்ளன என்பதைத்தான் மேலே உள்ள திருமறை வசனம் குறிப்பிடுகின்றது. கால்நடைகள் எனும்போது ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற விலங்குகள் குறிப்பாக உள்ளடங்குகின்றன. இத்தொடரில் பசு மாட்டில் இறைவன் வைத்திருக்கும் அற்புதங்களையும் அதிலிருந்து நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய படிப்பினைகளையும் பயன்களையும் பார்ப்போம்.

## இனப் பல்வகைமை

பாலூட்டி இனத்தைச் சேர்ந்த மாடு பொதுவாக ஆங்கிலத்தில் Cow என அழைக்கப்படுகிறது. இதில் மூன்று பெரும் பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றில் முதல் வகையானது போஸ் டோரஸ் (Bos taurus) என்பதாகும். இது ஒருவகை ஐரோப்பிய இனமாகும்; இது ஆபிரிக்க மற்றும் ஆசிய மாடுகளை ஒத்திருக்கும். இரண்டாவது வகை மாடானது போஸ் இண்டிகஸ் (Bos Indicus) வகையைச் சார்ந்ததாகும். இவ்வகை ஆங்கிலத்தில் zebu என்றும் அழைக்கப்படுகின்றது. மூன்றாவது வகை மாடானது ஒரொச் (aurochs) என்பதாகும். இவ்வகை மாடுகள் உலகில் இருந்து அழிந்துவிட்ட ஓர் இனமாகவும் மேலே குறிப்பிட்ட போஸ் டோரஸ் மற்றும் போஸ் இண்டிகஸ் இனங்களின் மூதாதைய இனமாகவும் கருதப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி உலகில் மொத்தமாக 1.3 பில்லியன் இற்கும் அதிகமான மாடுகள் இருந்துள்ளன. இன்றளவில் அதன் எண்ணிக்கை இன்னும் அதிகரித்துள்ளது.


## அல்குர்ஆனில் மாடு

இஸ்லாத்தைப் பொறுத்தவரை மேலே குறிப்பிட்ட கண்ணோட்டங்களில் அல்லாமல் மாட்டை அறிவியல் கண்ணோட்டத்தோடு பார்க்கின்றது. அரபு மொழியில் மாடு 'பகரா' என்று அழைக்கப்படுகிறது. அல்குர்ஆனில் பகரா என்று ஓர் அத்தியாயமே காணப்படுகின்றது. அதுதான் அல்குர்ஆனின் சூறாக்களின் வரிசையில் இரண்டாம் இடத்தில் உள்ளது. பகரா என்ற பிரயோகம் மொத்தமாக 4 இடங்களில் அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ளது. ஆரம்பத்தில் கூறிய அல்குர்ஆனிய வசனம் மாட்டிலும் பல அத்தாட்சிகள் உட்பட பயன்கள் இருப்பதாக கூறுகின்றது.

## மாடுகளில் உள்ள படிப்பினைகள்

ஆரம்பத்தில் கூறிய அல்குர்ஆன் வசனத்தின் (16: 66) முதல் பகுதியில் கால்நடைகளிடம் படிப்பினைகள் உள்ளதாக அல்லாஹ் கூறுகிறான். அந்தப் படிப்பினைகளைப் பற்றி அறிய ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு கீழே உள்ள பந்திகளைப் படியுங்கள். ஆராய்ச்சிக்காக மேற்கூறிய வசனத்திலிருந்து முக்கிய ஐந்து விடயங்களை எடுத்துக் கொள்வோம்.

1. அவற்றின் வயிற்றுப் பகுதி
2. வயிற்றிலுள்ள சாணத்திற்கும் இரத்தத்திற்கும் இடையில் உள்ள அம்சம்
3. கலப்பற்ற பால்
4. அருந்துபவர்களுக்கு இனிமை
5. தாராளமாகப் புகட்டுகிறோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை சற்று விரிவாக ஆராய்வோம்.

### 1. வயிற்றுப் பகுதி

பொதுவாக எமது வயிற்றுப் பகுதியில் உள்ள சமிபாட்டுத் தொகுதியில்தான் உணவுகள் செரிமானமடைந்து பின்பு அந்த செரிமானமாகிய உணவு புரதச் சத்தாக மாறி இரத்தத்தில் கலந்து நமக்கு உடல் முழுதும் கடத்தப்பட்டு உடலுக்கு வலிமையைத் தருகிறது. ஆனால் இந்த வயிற்றுப் பகுதி ஒரு சில கால்நடைகளுக்கு அதாவது மாடுகள், ஆடுகள், ஒட்டகங்கள் மற்றும் மான்கள் ஆகியவற்றிற்கு வித்தியாசமான முறையில் தனித்துவமாக அமைந்துள்ளது. ஆனால், இந்த அமைப்பு பன்றி முதலான மற்ற மிருகங்களிடம் காணப்படுவதில்லை. மாட்டின் வயிற்றுப் பகுதி நான்கு தனித்தனி அறைகளாக அமைந்துள்ளது. அவைகளாவன:

RETICULUM (ரெடிகுழம்), RUMEN, (ரூமென்), OMASUM, (ஓமசம்), ABOMASUM (அபோமசம்)

### பசு மாட்டின் உணவுச் சமிபாட்டு முறை

மாடு புல் வகைகளை தனது நீண்ட நாவினால் இழுத்துச் சுழற்றி உமிழ் நீருடன் கலந்து தனது வாயில் கீழ் பகுதியில் மட்டுமே அமைந்துள்ள அரைக்கும் பற்களால் நன்கு அரைத்து மென்று உணவாக விழுங்குகிறது. விழுங்கிய உணவு நேரடியாக 'ரெடிகுழம்' பகுதிக்கு சென்று சேமிக்கப்படுகிறது. பின்னர் ஓரிடத்தில் வந்து இளைப்பாறும் மாடு தான் வயிற்றின் 'ரெடிகுழம்' பகுதியில் சேமித்து வைத்த உணவை மீண்டும் வாய்ப் பகுதிக்கு இழுத்து அசை போட ஆரம்பிக்கிறது. இதன் மூலம் முதல் முறையாக உட்கொண்ட உணவு மீண்டும் மாட்டின் வாய்ப் பகுதிக்கு இழுக்கப்பட்டு நன்றாக மீண்டும் ஒரு முறை அரைக்கப்படுகிறது.

பசு மாடு மறுசுழற்சி முறையில் அசைபோட்ட உணவை அதன் வயிற்றின் இரண்டாம் பகுதியான RUMEN (ரூமென்) என்ற அறைக்குள் தள்ளுகிறது. இங்குள்ள பல மில்லியன் கணக்கான 'மைக்ரோப்ஸ்' எனப்படும் அமைப்புகள் ஏலவே செரிமானம் செய்ய முடியாத கடினமான பகுதிகளையும்கூட மிக எளிதாக செரிமானம் செய்துவிடுகிறது. பிறகு செரிமானம் ஆன உணவு மூன்றாம் அறையான OMASUM (ஓமசம்) ஐ சென்றடைகிறது. பசு மாட்டின் வயிற்றிலுள்ள இறுதிப் பகுதியான 'அபோமசம்' என்பது மற்ற பிராணிகளின் வயிறுகளை ஒத்து அமைந்துள்ளது. இந்த 'அபோமசம்' பகுதியில் சேகரிக்கப்பட்ட அசைபோட்ட உணவுகள் சிறுகுடல் பகுதிக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள மைக்ரோபியல் எனப்படும் செல் கட்டமைப்புகளால் முழுவதுமாக ஜீரணமாக்கப்படுகிறது. புரதச் சத்துக்களான அமினோ ஆசிட் மற்றும் விட்டமின்கள் உருவாக இந்த பகுதியே பயன்படுகிறது. பிறகு முழுவதும் ஜீரணமான உணவு நேரடியாக இரத்தத்தில் கலந்துவிடுகிறது!

### 2. வயிற்றிலுள்ள சாணத்திற்கும் இரத்தத்திற்கும் இடையில் உள்ள அம்சம்

உணவுகளில் தலைசிறந்த உணவாகக் கருதப்படும் பால் எவ்வாறு உற்பத்தியாகிறது என்பது மிகப் பிற்பட்ட காலத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. பல வருடங்களுக்கு முன்னர் வரை இரத்தம்தான் பாலாக மாறுகிறது என்று நம்பி வந்தனர். ஆனால், உண்மையில் இரத்தம் பாலாக மாறுவதில்லை. மாறாக, உண்ணுகின்ற உணவுகள் சிறு குடலுக்குச் சென்று அரைக்கப்பட்டுக் கூழாக இருக்கும் நிலையில் அங்குள்ள உறிஞ்சுகள் மூலமாக அதிலிருந்து உறிஞ்சப்படும் சத்துகள்தான் இரத்தமாகவும் இன்ன பிற பொருட்களாகவும் மாற்றப்படுகின்றன. இவ்வாறு உறிஞ்சப்படும் பொருட்களை இரத்தம் இழுத்துச் சென்று பாலை உற்பத்தியாக்கும் மடுக்களில் சேர்க்கிறது. அங்கே அவை பாலாக உருமாருகின்றன.

அதாவது அரைக்கப்பட்ட உணவுக் கூழுக்கும் இரத்தமாக மாறுகின்ற நிலைக்கும் இடைப்பட்ட பொருளில் இருந்துதான் பால் உற்பத்தியாகிறது என்ற 21 ஆம் நூற்றாண்டு விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பை 1400 ஆண்டுகளுக்கு முன்பு அதே வார்த்தைகளில் நேரடியாகவே திருக்குர்ஆன் கூறியிருப்பது ஆய்வாளர்களைப் பெரிதும் வியப்புக்குள் ஆழ்த்தியுள்ளது. இந்த வசனத்தைப் பாருங்கள்:

''அவற்றின் வயிற்றிலுள்ள சாணத்திற்கும் இரத்தத்திற்கும் இடையிலிருந்து கலப்பற்ற பாலை அருந்துபவர்களுக்கு இனிமையானதாக தாராளமாகப் புகட்டுகிறோம்.''

சாணத்துக்கும் குருதிக்கும் இடையிலிருந்து பால் வெளி வந்த போதிலும் சற்றும்கூட அதில் சாணம், உதிரம் ஆகியவற்றின் நிறமோ, மணமோ, சுவையோ இருப்பதில்லை. இது வல்ல நாயனின் அற்புதமான ஏற்பாடன்றி வேறென்னவாக விருக்கும்!



PUBLIC LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. கலப்பற்ற பால்

பால் சகல சத்துக்களும் அடங்கிய ஒரு பூரண உணவு; நோய் நிவாரணி. நோய் எதிர்ப்பு சக்தியுடன் எண்ணற்ற சத்துக்கள், ஔடதங்கள் அதில் தாராளமாகப் பொதிந்துள்ளன. பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை எல்லோருக்கும் ஏற்ற ஓர் ஊட்டச் சத்து மிகுந்த திரவ உணவுதான் பசும் பால். ஒரு மனிதனுக்கு ஊட்டச் சத்துக்களில் புரோட்டீன், கல்சியம் ஆகியவை இன்றியமையாதவையாக உள்ளன. இவை பசும் பாலில் அதிகமாகக் காணப்படுகின்றன. எலும்பு நோய்கள் வராமல் கல்சியம் பாதுகாக்கிறது. பசும்பாலில் விட்டமின் ஏ, பி12, தையாமின் போன்ற சத்துக்களும் அடங்கியுள்ளன. பசும்பாலில் தயாரிக்கப்படும் வெண்ணெய், நெய் போன்றவற்றில் கல்சியம் உள்ளதால் இது மனிதனின் நோய் எதிர்ப்புச் சக்தியை (IMMUNE SYSTEM) மேம்படுத்துகிறது.

அல்லாஹ் அருள்மறை குர்ஆனில் கலப்பற்ற பால் என்று கூறுவதன் மூலம் அந்தப் பாலில் எப்படிப்பட்ட ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன என்பதை சிந்திக்க வலியுறுத்துகிறான். ஆனால், மனிதன் அந்தப் பாலில் தண்ணீரை ஊற்றி கலப்படம் செய்து விற்கிறான். இஸ்லாம் கலப்படத்தை வன்மையாகக் கண்டிக்கிறது!

### 4. அருந்துபவர்களுக்கு இனிமை

சுவனத்தை வர்ணிக்கும் ஹதீஸ்களிலும் சில அல்குர்ஆனிய வசனங்களிலும் பால் சிலாகித்துக் கூறப்பட்டுள்ளது. சுவனத்தில் ஓடும் நான்கு ஆறுகளில் ஒன்றுதான் பாலாறு. சுவனத்துப் பானங்களில் ஒன்றாக பால் இருப்பதுபோன்று இங்கும் பசும்பால் அனைவருக்கும் ஓர் இனிமையான பானம்தான். அது தெவிட்டாத உணவுப் பண்டமும் கூட. அதன் வெண்மை நிறமும் இனிமையான சுவையும் யாரையும் கவர்ந்துவிடும். பால் பற்றிக் கூறும் மேற்சொன்ன வசனத்தில் அல்லாஹ் அதை அருந்துபவருக்கு இனிமை என்று வர்ணிக்கிறான்.

### 5) தாராளமாகப் புகட்டுகிறோம்

அல்லாஹ் பால் பற்றிக் குறிப்பிடும்போது தாராளமாகப் புகட்டுகிறோம் என்று இறுதியாகக் கூறுகிறான். அதாவது, நாளுக்கு நாள் சனத்தொகை அதிகரித்துக் கொண்டேதான் வருகின்றது. அதற்கேற்றவாறு பால் உற்பத்தியும் அதிரித்துக் கொண்டேதான் வந்துள்ளது. மாடுகளை இறைச்சிக்காக அறுக்கும் வீதம் அதிகரித்தாலும் சனத்தொகை பெருகினாலும் அதற்கு நிகராக பால் உற்பத்தியும் பெருகிய வண்ணம் உள்ளமை இந்த அல்குர்ஆனிய வசனத்தின் யதார்த்தத்தை விளக்குகின்றது. இந்த வார்த்தையின் உண்மை நிலையை நிரூபிக்க உலகளாவிய ரீதியில் அதிகரித்துவரும் பால் உற்பத்தியைப் பார்ப்போம்.

1968 ஆம் ஆண்டு 21 மில்லியன் தொன்களாக இருந்த இந்தியாவின் பால் உற்பத்தி 2001 ஆம் ஆண்டில் 81 மில்லியன் தொன்களாக உயர்ந்துள்ளது. மக்கள் தொகை பெருகப் பெருக பாலின் உற்பத்தியும் பெருகி வருகிறது. மாறாக, பாலின் உற்பத்தி குறைந்தபாடில்லை. அடுத்தபடியாக அமெரிக்கா ஆண்டுக்கு சராசரியாக 71 மில்லியன் தொன்கள் பால் உற்பத்தியை மேற்கொள்கிறது. 1998 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி உலக நாடுகள் முழுவதினதும் பால் உற்பத்தியைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஆண்டுக்கு சராசரியாக 557 மில்லியன் தொன்களுக்குக் குறைவில்லாமல் பால் உற்பத்தியாகியுள்ளது.

உலகம் முழுதும் 600 கோடி பேர் பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களை உட்கொள்கின்றனர். சுமார் 1.5 கோடி மக்கள் பால்பண்ணையை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். கடந்த முப்பது ஆண்டுகளில் பால் உற்பத்தி 50 சதவீதம் அதிகரித்துள்ளது. இன்று உலகம் முழுவதும் உற்பத்தியாகும் பாலில் 85 சதவீதம் பசு மாடுகளிடமிருந்தே பெறப்படுகிறது. உலகளவில் அமெரிக்கா பால் உற்பத்தியில் முதல் இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து இந்தியா, சீனா, பிரேசில், ரஷ்யா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. 1970 ஆம் ஆண்டு முதல் தெற்கு ஆசியா பால் உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கிறது. சுபஹானல்லாஹ்! இறைவன் எவ்வாறு பாலைத் தாராளமாகப் புகட்டுகின்றான் என்று பார்த்தீர்களா?

### படிப்பினை பெறுவோம்

ஒரேயொரு திருமறை வசனத்தில் எத்தனை படிப்பினைகளை அல்லாஹ் சொல்லித் தருகின்றான்! அல்லாஹ்வின் எண்ணிலடங்காத படைப்பினங்களில் பசு என்ற ஒன்றிலே இவ்வளவு அற்புதங்களும் படிப்பினைகளும் என்றால் அவனுடைய படைப்புகள் ஒவ்வொன்றையும் ஆராயும் மனிதனுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் மிக இறுக்கமான ஓர் உறவு ஏற்படும். அதன் உயர்ந்த நிலைதான் அல்லாஹ்வை அஞ்சுதல். ''நிச்சயமாக அல்லாஹ்வை மிக்க அஞ்சுபவர்கள் அறிஞர்கள்தான்.'' (35:28)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம்

எம்.ஏ. ரஹ்மான்

ஹர்முஸான், பாரசீக மாகாணமான நஹவந்தின் தேசாதிபதியாகத் திகழ்ந்தான். இஸ்லாத்துக்கு எதிராக கடுமையாகப் போராடியவன். முஸ்லிம்களுக்கும் பாரசீகருக்குமிடையில் ஏற்பட்ட போருக்கும் அதன் மூலம் ஏற்பட்ட பேரழிவிற்கும் அவனே காரணமாக இருந்தான். அடுத்தடுத்து வந்த போர்களிலெல்லாம் அவன் முர்க்கமாகப் போராடினான்.

கடைசியில் ஹர்முஸான் கைது செய்யப்பட்டான். கடந்த காலங்களிலே அவன் முஸ்லிம்களுடன் கொண்டிருந்த தொடர்பு மிகவும் கசப்பானதாகும். எனவே, தான் அடிமையாக விற்கப்படலாம் அல்லது தூக்குமேடைக்கு அனுப்பப்படலாம் என்றே அவன் எதிர்பார்த்தான். ஆனால், அவனுக்கு அத்தகைய தண்டனைகள் அளிக்கப்படவில்லை. அவன் குறிப்பிட்ட வரி ஒன்றை கலிபாவுக்குச் செலுத்தியதும், சுதந்திர புருஷனாக விடப்பட்டான்.

அவன் மீண்டும் பெரும் படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு வந்து முஸ்லிம்களைத் தாக்கினான். கடுமையான யுத்தத்தின் பின்னர் ஹர்முஸான் மீண்டும் கைது செய்யப்பட்டான். கலிபா உமர் தர்பாரில் அமர்ந்திருந்த சமயம், ஹர்முஸான் அவர் சமுகத்திற்கு முன் கொண்டு



வரப்பட்டான். கைதி எந்தக் கணமும் சாவினை எதிர்பார்த்து அஞ்சி நின்றான்.

உமர்: நகவந்தின் புரட்சிக்கார தேசாதிபதி நீதானே?

ஹர்முஸான்: ஆம், நானேதான்.

உமர்: நீதான் முஸ்லிம்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறியவனா?

ஹர்முஸான்: ஆம்.

உமர்: அத்தகைய குற்றத்திற்குத் தண்டனை மரணம் என்பதை நீ அறிவாயா?

ஹர்முஸான்: எனக்குத் தெரியும்.

உமர்: சரி, அத்தண்டனையைப் பெற்றுக் கொள்ள நீ இக்கணமே ஆயத்தமாக இருக்கின்றாயா?

ஹர்முஸான்: நான் தயார். நான் இறப்பதற்கு முன்னர் ஒரு வேண்டுகோள்.

உமர்: அது என்ன?

ஹர்முஸான்: எனக்குத் தாகமாக இருக்கிறது. ஒரு குவளை தண்ணீர் எனக்குக் கிடைக்குமா?

உமர்: நிச்சயமாக.

*(கலிபாவின் ஆணைப்படி ஹர்முஸானுக்க ஒரு குவளைத் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது.)*

ஹர்முஸான்: விசுவாகளின் தலைவரே! நான் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கும் பொழுதே என்னுடைய தலை வெட்டப்படலாம் என நான் அஞ்சுகிறேன்.

உமர்: ஒரு பொழுதுமில்லை. இந்தத் தண்ணீரை நீ குடித்து முடிக்கும் வரை யாரும் உன் உரோமத்தையேனும் தொட மாட்டார்கள்.

ஹர்முஸான்: அமீருல் முஃமினீனே! நான் இந்தத் தண்ணீரைக் குடித்து முடிக்கும் வரை யாரும் என்னுடைய உரோமத்தைக் கூடத் தொட மாட்டார்கள் என்று நீங்கள் வாக்குத் தந்திருக்கின்றீர்கள். நான் இந்தத் தண்ணீரைக் குடிக்க மாட்டேன். (தண்ணீரை நிலத்திலே ஊற்றி) எனவே, நீங்கள் என்னைக் கொல்ல முடியாது.

உமர்: (முறுவலித்தபடி) இது உன்னுடைய புதுமையான தந்திரம். இருப்பினும், உமர் தமது வாக்கினைத் தந்துவிட்டார். நீ சுதந்திரமாகப் போகலாம்.

இச்சம்பவம் கழிந்த சிறிது காலத்திற்குப் பின்னரும் ஹர்முஸான் மீண்டும் மதீனாவுக்கு வந்தான். இந்தத் தடவை பெரும் தொகையானவர்களுடன் வந்தானாயினும், அவனுடைய நோக்கம் வேறாக அமைந்தது.

கலீபாவைப் பார்த்து அவன் பின்வருமாறு கூறினான்:

"அமீருல் முஃமினீனே! புதிய வாழ்க்கையை நாடியே நாங்கள் இங்கு வந்துள்ளோம். நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள எங்களுக்கு உதவி செய்யுங்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒரு நிமிடம்தான்

- ❖ ஒரு மில்லி செக்கனின் மதிப்பை ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வாங்கியவரைக் கேட்டால் தெரியும்.
- ❖ ஒரு செக்கனின் மதிப்பை விபத்தில் உயிர் தப்பியவரைக் கேட்டால் தெரியும்.
- ❖ ஒரு நிமிடத்தின் மதிப்பை தூக்கிலிடப்படும் கைதியைக் கேட்டால் தெரியும்.
- ❖ ஒரு மணிநேரத்தின் மதிப்பை உயிர் காக்க போராடும் மருத்துவரைக் கேட்டால் தெரியும்.
- ❖ ஒரு நாளின் மதிப்பை அன்று வேலை இல்லாத தினக் கூலித் தொழிலாளரைக் கேட்டால் தெரியும்.
- ❖ ஒரு வாரத்தின் மதிப்பை வாரப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரைக் கேட்டால் தெரியும்.
- ❖ ஒரு மாதத்தின் மதிப்பை குறைப் பிரசவம் ஆகும் ஒரு தாயைக் கேட்டால் தெரியும்.
- ❖ ஒரு வருடத்தின் மதிப்பை தேர்வில் தோல்வியுற்ற ஒரு மாணவனைக் கேட்டால் தெரியும்.

எம்.ஆர். ஆயிஷா
தரம் 10
குரு/ ஹிஸ்புல்லாஹ் ம.க.
தெலியாகொன




# யானை பற்றிய சில தகவல்கள்

- ☞ யானையில் மூன்று சிற்றினங்கள் உள்ளன.
- ☞ யானைக்கு 6 தடவைகள் பல் விழுந்து முளைக்கும்.
- ☞ இதன் மூளை 5 கிலோ கிராம் ஆகும்.
- ☞ இதன் தந்தம் மூன்று மீற்றர் (10 அடி) நீளமுடையது.
- ☞ பெண் யானையின் கர்ப்ப காலம் 22 மாதங்கள்.
- ☞ இதன் ஆயுட்காலம் 70 ஆண்டுகளாகும்.
- ☞ இவை ஒரு நாளைக்கு 16 மணித்தியாலங்கள் உணவு சேகரிப்பதில் செலவிடும்.
- ☞ யானையின் அறிவியல் பெயர் 'எலிஃவாஸ் போக்கியஸ்' ஆகும்.
- ☞ இவை ஒரு நாளைக்கு 140 கிலோ முதல் 270 கிலோ வரை உணவினை உட்கொள்கின்றன.

எம்.என். அப்துல் பாசித்
தரம் 8
மா/மின்ஹாஜ் ம.வி.
நிககொள்ள

# இந்தியா பற்றிய சில தகவல்கள்



- ❍ இந்தியாவின் சனத்தொகை, 1.2 பில்லியன் ஆகும்
- ❍ இந்தியாவில் காணப்படும் பாராளுமன்ற முறை, சமஷ்டி முறை.
- ❍ முதல் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்.
- ❍ முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு.
- ❍ தற்போதைய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி.
- ❍ தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி.
- ❍ இந்தியாவின் தலைநகரம் புதுடில்லி.
- ❍ பெரிய நகரம் மும்பை.
- ❍ அதிகமாக தங்கம் பெறப்படும் மாநிலம் கர்நாடக மாநிலம்.
- ❍ முதலாவது ஆசிய விளையாட்டுக்கள் நடைபெற்ற நாடு இந்தியா.
- ❍ பூச்சியத்தை அறிமுகப்படுத்திய நாடு இந்தியா.
- ❍ இந்தியாவின் இரும்பு மனிதர் என்றழைக்கப்படும் மனிதர், சர்தார் வல்லபாய் பட்டேல்.
- ❍ உலகில் அதிக மழைவீழ்ச்சி பெறும் இடம், இந்தியாவின் 'சீறாபுஞ்சி' ஆகும்.
- ❍ இந்தியாவின் தேசிய பூ தாமரை.
- ❍ இந்தியாவின் 11 ஆவது ஜனாதிபதி அப்துல் கலாம்.
- ❍ 2014 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற இந்தியர் கைலாஷ் சித்யார்த்தி.
- ❍ ஆசியாவில் முதலாவதாக முத்திரையை வெளியிட்ட நாடு இந்தியா.

நதா இர்ஷாட்
ம/ஆமினா தே.பா.
மாத்தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வதேச அமைப்புகள்

**ஐக்கிய நாடுகள் சபை (UNO)**

- இது *1948.10.24* ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. இத்தினம் சர்வதேச ஐக்கிய நாடுகள் சபை தினமாக கொண்டாடப்படுகிறது.
- இதில் *191* நாடுகள் அங்கம் வகிக்கின்றன.
- *2* ஆம் உலகப் போரின் பின் மீண்டும் உலகில் போர், அமைதியின்மை ஏற்படாது இருப்பதற்காக உலக நாடுகள் அனைத்தும் இணைந்து உருவாக்கிய அமைப்பாகும்.

---

**ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பு**

- இதன் தலைமையகம் நியூயோர்க் ஆகும்.
- இது *1946* இல் உருவாக்கப்பட்டது.
- நாதியற்ற சிறுவர்களின் நலன் விருத்திக்காக உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்பு இதுவாகும்.
- சிறுவர்களின் உரிமைக்காகவும் நீண்டகால நலன் விருத்திக்காகவும் உதவும்.

---

**யுனெஸ்கோ**

- *1946* இல் உருவாக்கப்பட்டது.
- இதனை ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான, பண்பாட்டு நிறுவனம் என அழைப்பர்.
- உலகளாவிய ரீதியில் கல்வி, விஞ்ஞானம், பண்பாடு ஆகியவற்றை பேணுதல், மேம்படுத்தல் இதன் நோக்கமாகும்.

---

**ஒபேக் நாடுகள் அமைப்பு**

- *1960* இல் உருவாக்கப்பட்டது.
- பெற்றோலியத்தை ஏற்றுமதி செயயும் நாடுகளின் ஒத்துழைப்புக்குழு என அழைப்பர்.
- பெற்றோலியத்தை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்யும் நாடுகள் பெற்றோலிய விலையை நிலையாக பேணவும் பிரச்சினைகளை தீர்க்கவும் உருவாக்கிய அமைப்பு இதுவாகும்.

**சார்க் நாடுகள் அமைப்பு (SAARC)**

- இது *1985.12.12* இல் உருவாக்கப்பட்டது.
- இதில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, ஆப்கானிஸ்தான் ஆகிய *8* நாடுகள் உள்ளடங்கும்.
- தலைமைச் செயலகம் நேபாளம் காத்மண்டுவில் உள்ளது.

பா. பஹ்ராமா ஷாஜஹான்
அல்ஹிக்மா கல்லூரி
கொழும்பு - *12*

# சிந்தனைத் துளிகள்


- வாழ்க்கையில் உன்னிடம் இல்லாதவற்றைப் பற்றி முணுமுணுத்துக் கொண்டிருப்பது முட்டாள்தனம். உனக்கு இறைவன் இப்போது கொடுத்துள்ளவற்றுக்கு அவனுக்கு நன்றியுடையவனாக இருப்பதுடன் உனக்கு கிடைத்தவற்றைக் கொண்டு திருப்தியடைந்து கொள்.
- இன்பமும் துன்பமும் எல்லோருடைய வாழ்க்கையிலும் பொதுவானது. இரவொன்றுக்கு நீ முகம் கொடுத்தால் பகலொன்று வரவே செய்யும்.
- அமைதியான மனமும் உண்மையான இதயமும் மனித இனத்துக்குத் தேவைப்படும் பெறுமதி வாய்ந்த பொருட்கள். அமைதி ஆத்மாவை வழி நடத்துகிறது; உண்மை இதயத்தை ஆள்கிறது.
- வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் சகஜம். வெற்றியின்போது துள்ளாமலும் தோல்வியின் போது துவளாமலும் இருப்பதே சாதனையாளர்களின் இரகசியம்.
- மகிழ்ச்சி ஒரு பட்டாம்பூச்சியைப் போன்றது. நீ அதைத் துரத்திச் சென்றால் கையில் அகப்படாமல் போகக் கூடும். ஆனால், நீ பொறுமையாகக் காத்திருந்தால் அது உன் கை மீது வந்து அமரலாம். அதைத்தான் ''பொறுத்தார் பூமி ஆள்வார்'' என்கிறார்கள்.

தஹ்ரா இப்ஹாம்
வெலிகம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மூளையைப் பாதிப்பவை



- காலை உணவு உண்ணாமை.
- புகை பிடிப்பது.
- அளவுக்கு மீறி சாப்பிடுவது.
- அளவுக்கு அதிகமாக சர்க்கரை, இனிப்பு பண்டங்கள் சாப்பிடுவது.
- காற்றோட்டமில்லாத அறையில் மாசடைந்த காற்றுள்ள சூழலில் வாழுதல்.
- போதியளவு தூக்கமின்மை.
- உடல் நோயுற்ற காலங்களில் மூளைக்கு அதிகமாக வேலை கொடுத்தல். தேவையில்லாத பிரச்சினையை யோசித்து வீணாக மனதை அலட்டிக் கொள்ளல்.

✍ நவாஸ் பாத்திமா ஸப்னா
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.
ஓட்டமாவடி


---

# சிந்தனைத் துளிகள்

- ஏனையோரின் குற்றங்களைப் பேசுவதைவிட உனது குற்றங்களை தேடித் திருத்திக் கொள்வது சிறந்தது.
- விட்டுக் கொடுக்கும் தன்மை எமக்கிருந்தால் நாம் விட்டுக் கொடுத்த அனைத்தும் ஒரு நாள் எம்மைத் தேடி வரும்.
- ஒவ்வொரு தோல்விக்குப் பின்னாலும் நிச்சயமாக ஒரு வெற்றி உள்ளது.
- ஒரு கடிகாரம் உள்ளவனுக்கு சரியான நேரம் தெரியும். இரு கடிகாரம் உள்ளவனுக்கு எப்போதும் சந்தேகம்தான்.
- நல்லவன் என்று பெயர் எடுப்பது கடினம். ஆனால், கெட்டவன் என பெயர் எடுக்க ஒரு நொடிப்பொழுது போதும்.
- ஒரு வார்த்தை மூலமாவது உதவியவரை மறக்கக் கூடாது.
- எங்கு சென்றாலும் எப்போதும் உண்மை பேசு; நேர்மைக்கு மாற்றமாக நடவாதே; பிறர் குற்றங்களை ஆராயாதே.

✍ எம்.ஏ. அம்மார்
கு/ அல் அஷ்ரக் ம.வி
தல்கஸ்பிட்டிய

# இதயம் பற்றிய சில துளிகள்




- எமது உடலினுள் உணவு, வாயுக்கள், கழிவுப் பொருட்கள் என்பன குருதி மூலமே கொண்டு செல்லப்படுகின்றன. இவ்வாறு, குருதியைக் கொண்டு செல்வதற்குப் பயன்படும் பம்பி 'இதயம்' எனப்படுகின்றது.
- இதயம் நெஞ்சறைக் குழியினுள்ளே நுரையீரல்கள் இரண்டிற்கும் இடையே அமைந்துள்ளது. இது இதயவறைச் சுற்று மென்சவ்வால் போர்த்தப்பட்டு இதயச் சுற்று பாய்மத்தினால் நிரப்பப்பட்டுள்ளது. இப்பாய்மம் இதயத்தை ஈரலிப்பாக வைத்திருப்பதோடு, பாதுகாப்பையும் வழங்குகின்றது.
- மனித இதயம் 4 அறைகளைக் கொண்டு காணப்படுகின்றது.
- இரண்டு சோணை அறைகள்.
- இரண்டு இதயவறைகள்.
- இதயம் சுருங்கி விரிவது 'இதயத் துடிப்பு' எனப்படுகின்றது.
- சாதாரணமான ஒரு மனிதனில் ஒரு நிமிடத்திற்கு 72 (60-80) முறை இதயத் துடிப்பு ஏற்படுகின்றது.

✍ முத்தலிப் பாத்திமா நிஸ்ரா
தரம் - 9
ஸாஹிரா கல்லூரி
குருணாகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்



ஏ.ஆர்.எம். ஜிப்ரி
அதிபர்
களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. ஹஸரத் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட பின் ஜனாஸாத் தொழுகையை நடத்தியவர் யார்?
2. அல்குர்ஆன் ஓதும்போது ஸஜதாவுடைய வசனங்கள் வந்தால் செய்யும் ஸுஜூத் எவ்வாறு அழைக்கப்படும்?
3. நேரமோ, காலமோ குறிப்பிடாமல் பொதுவாக நிறைவேற்றப்படும் சுன்னத்தான தொழுகை எவ்வாறு அழைக்கப்படும்?
4. முஸ்லிம் என்றால் ஒரு முஸ்லிமான ஆணைக் குறிக்கும் அரபுச் சொல். முஸ்லிமான பெண்ணைக் குறிக்கும் அரபுச் சொல் எது?
5. நபியவர்களின் 57 ஆவது வயதில் நிகழ்ந்த யுத்தம் யாது?
6. பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தன்னுடைய 12 ஆவது வயதில் வியாபாரத்துக்காக முதன் முதலில் சிரியாவுக்குப் பயணம் செய்தார்கள். இந்த முதலாவது வர்த்தகப் பிரயாணத்தில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை அழைத்துச் சென்றவர் யார்?
7. அலி (ரழியல்லலாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சிக் காலம் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டில் தொடங்கியது?
8. அலி (ரழியல்லலாஹு அன்ஹு) அவர்களைக் கொலை செய்தவனின் பெயர் என்ன?
9. வுளூவின் பர்ளுகள் எத்தனை?
10. தயம்முமின் பர்ளுகள் எத்தனை?
11. உஹதுப் போரின்போது ஹம்ஸா (ரழியல்லலாஹு அன்ஹு) அவர்களைக் கொலை செய்தவனின் பெயர் என்ன?
12. ஸலாத்துல் கஸ்ரு என்றால் என்ன?
13. இறையச்சத்தைக் குறிக்கும் அரபுச் சொல் எது?
14. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அபூபக்ர் (ரழியல்லலாஹு அன்ஹு) அவர்களும் குறைஷிகளிடமிருந்து தப்பித்து வந்து தௌர் குகையில் எத்தனை இரவுகள் தங்கியிருந்தனர்?
15. ஸகாத்தை வசூலித்தல், கணக்குப் பார்த்தல் போன்ற பணிகளைச் செய்பவர் அரபியில் எப்பெயரால் அழைக்கப்படுகிறார்?
16. ஸபிய்யா (ரழியல்லலாஹு அன்ஹா) அவர்களின் கணவர் கொல்லப்பட்டதும் ஸபிய்யா (ரழியல்லலாஹு அன்ஹா) மற்றும் குழுவினர் கைது செய்யப்பட்டதும் எந்த யுத்தத்தில்?
17. உஸ்மான் (ரழியல்லலாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சிக் காலம் எத்தனை வருடங்களாகும்?

---

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் விமான விபத்தில் காலமானது எப்போது?
2. ஈரானிய புரட்சி வெற்றி பெற்றது இமாம் கொமெய்னி அவர்களின் தலைமையில் 1979 இல் ஆகும். இமாம் கொமெய்னி அவர்கள் இறையடி சேர்ந்த ஆண்டு எது?
3. சுதந்திர இலங்கையின் பாராளுமன்ற கூட்டத் தொடரை ஆரம்பித்து வைக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்ற முதலாவது பெண்மணி யார்?
4. பிஜி நாடு பசுபிக் சமுத்திரத்தில் உள்ள சுமார் 300 தீவுகளை உள்ளடக்கிய ஒரு தீவுக் கூட்டமாகும். இங்கு கணிசமான சதவீதத்தினர் இந்திய வம்சாவளியினர். 1929 ஆம் ஆண்டிலிருந்துதான் இந்திய வம்சாவளியினருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. பிஜி நாடு எத்தனையாம் ஆண்டில் சுதந்திரம் பெற்றது?
5. 5 ஆம் விஜயபாகு மன்னன் காலத்தில் இருந்த முஸ்லிம் மந்திரியின் பெயர் என்ன?

விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

# أُسْرَةُ الرَّسُولِ صلى الله عليه وسلم




عمر : هَلْ هَذِهِ شَجَرَةٌ ؟

عثمان : نَعَمْ. هَذِهِ أُسْرَةُ الرَّسُولِ (صلى

عمر : صلى الله عليه وسلم

عثمان : هَذَا وَالِدُهُ عَبْدُ اللهِ

عمر : هَذِهِ وَالِدَتُهُ آمِنَة

عثمان : وَهَذَا جَدُّهُ عَبْدُ الْمُطَّلِبْ

عمر : وَهَذَا عَمُّهُ العَبَّاس

عثمان : وَهَذَا عَمُّهُ حَمْزَة

عمر : وَهَذَا عَمُّهُ أَبُو طَالِبْ

عثمان : هَذِهِ عَمَّتُهُ صَفِيَّة

عمر : وَهَذَا اِبْنُهُ القَاسِم

عثمان : وَهَذَا اِبْنُهُ عَبْدُ اللهِ

عمر : وَهَذَا اِبْنُهُ إِبْرَاهِيم

عثمان : وَهَذِهِ اِبْنَتُهُ فَاطِمَةُ

عمر : وَهَذِهِ اِبْنَتُهُ رُقَيَّةُ

عثمان : وَهَذِهِ اِبْنَتُهُ زَيْنَبُ

عمر : وَهَذِهِ اِبْنَتُهُ أُمُّ كُلْثُوم

## أَجِبْ عَنِ الأَسْئِلَةِ الْآتِيَةِ

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க

1. مَنْ وَالِدُ الرَّسُولِ (صلى الله عليه وسلم)؟
2. مَنْ وَالِدَةُ الرَّسُولِ (صلى الله عليه وسلم)؟
3. مَنْ عَمُّ الرَّسُولِ (صلى الله عليه وسلم)؟
4. مَنْ جَدُّ الرَّسُولِ (صلى الله عليه وسلم)؟
5. مَنْ اِبْنُ الرَّسُولِ (صلى الله عليه وسلم)؟
6. مَنْ اِبْنَةُ الرَّسُولِ (صلى الله عليه وسلم)؟
7. مَنْ وَالِدُكَ؟
8. مَنْ جَدُّكَ؟
9. مَنْ عَمُّكَ؟
10. مَنْ صَدِيقُكَ؟



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## إِقْرَأْ الْفَقْرَةَ ثُمَّ أَجِبْ بِنَعَمْ (✓) أَوْ لا (×)

பின்வரும் பந்தியை வாசித்து சரி பிழை கூறுக.

يَسْتَيْقِظُ أَحْمَدُ مُبَكِّرًا عِنْدَ الفَجْرِ. يُصَلِّي الْفَجْرَ فِيْ الْمَسْجِدِ. أَحْمَدُ لَا يَنَامُ بَعْدَ صَلاَةِ الفَجْرِ، هُوَ يَقْرَأُ الْقُرْآنَ. يَذْهَبُ إِلَى الْمَدْرَسَةِ بِالْحَافِلَةِ السَّاعَةَ السَّابِعَةَ . يَوْمَ العُطْلَةِ ، يَسْتَيْقِظُ مُبَكِّرًا أَيْضًا. يَوْمَ الجُمُعَةِ فِيْ الصَّبَاحِ يَقْرَأُ صَحِيفَةً أَوْ كِتَابًا، وَيُصَلِّي الجُمُعَةَ فِيْ المَسْجِدِ الكَبِيْرِ

1. يَسْتَيْقِظُ أَحْمَدُ مُبَكِّرًا
2. يُصَلِّي أَحْمَدُ الجُمْعَةَ فِيْ المَسْجِدِ الكَبِيْرِ
3. يَوْمَ الجُمْعَةِ يَقْرَأُ صَحِيفَةً أَوْ كِتَابًا
4. أَحْمَدُ يَنَامُ بَعْدَ صَلَاةِ الفَجْرِ
5. يُصَلِّي أَحْمَدُ الفَجْرَ فِيْ البَيْتِ
6. أَحْمَدُ مَهَنْدِسٌ
7. يَذْهَبُ إِلَى الْمَدْرَسَةِ بِالسَّيَّارَةِ


---

## صِلْ بَيْنَ الكَلِمَتَيْنِ الْمُتَضَادَتَيْنِ وَصُوْرَتَيْهِمَا

படங்களுக்கு பொருத்தமான வினைச் சொற்களை கண்டறிவோம்.

எதிர் சொற்களை அடையாளப் படுத்துவோம்

| | | | | |
|---|---|---|---|---|
| I | يَخْلَعُ | | تَسْأَلُ | A |
| J | تَسْحَبُ | | يَبْتَعِدُ | B |
| K | تُجِيْبُ | | تُشْرِقُ | C |
| L | تَقْتَرِبُ | | تُعْطِي | D |
| M | يَتَذَكَّرُ | | يَسْتَرِيْحُ | E |
| N | تَأْخُذُ | | يَلْبَسُ | F |
| O | تَغِيْبُ | | يَنْسَى | G |
| P | يَتْعَبُ | | تَدْفَعُ | H |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## *Assalamu alaikum friends!*



Glad to meet you after a fun filled vacation. Since, we are ahead after a month of "disaster" it would be apt if we discuss things related to disaster. Isn't it friends?

December is known as the month of disaster by most of the people since many have witnessed disasters, especially naturally triggered, in this particular month.

As Muslims, we always have to view disasters or any other calamity, as a test of Allah. It is indeed important for us to instill the fact in our minds that the whole of our life is a test.

What should we actually do in such a situation?

- We should turn ourselves completely towards Allah.
- We should put our absolute trust in him pray to him.
- We should understand the fact that he is the most powerful, there is no one equal to him and call unto him from the bottom of our hearts.
- Offering salaathul Haaja, is a very good mean to seek dua from Allah.
- Further, reciting the dua "Hasbuna Allahu wa ni'mal wakeel" is proved to be very effective while we seek dua from the All mighty.
- Giving sadaka is also an excellent mean to seek the pleasure of Allah.

So, friends, just remember that these steps are not only to be applied in times of disaster. You can apply these steps in all times of need. Inshaa Allah, Allah will accept our prayers and grant us peace and contentment.

The recent giant rain in Chennai and the constant cyclones in many regions of the world shook the whole of humankind and left a number of lessons to learn.

Disasters occur suddenly and unexpectedly. Hence, we should be prepared all the time, to face any kinds of disasters and calamities.

Hence friends, hope these ideas would have built in a spirit of confidence within you all. Thus, always be prepared to face any challenge, whether it is a disaster, calamity, illness or any other distressing situation with fuller strength.

We are in a fresh new year, so let's spent this year too with the vigor of calling unto Allah for every single need of ours.

May Allah bless you!!!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Hadith of the month

Narrated 'Abdullah bin 'Amr (Radi-Allahu 'anhu):

A man asked the Prophet (Sallallahu 'Alaihi Wa Sallam), "What sort of deeds or (what qualities of) Islam are good?" The Prophet (Sallallahu 'Alaihi Wa Sallam) replied, 'To feed (the poor) and greet those whom you know and those whom you do not Know. Bukhari Vol. 1 : No. 11 and No. 27

Your Corner

## A little bit of humor:

"I changed my password everywhere to "incorrect".

That way when I forget it, it always reminds me "your password is incorrect."


# Wudhu



Prior to entering salat, a person is required to undertake a certain purification procedure known as "Wudhu", without which the person's prayer would not be acceptable in the sight of Allah (sbwt). Allah, the All mighty says "o ye who believe, when ye prepare for prayer, wash your faces and your arms to the elbows, rub your heads (with water) and wash your feet to the ankles. (Al Quran)

The prophet (sal) said, "Prayer without ablution is invalid.

**Hithayathullah Fathima Azka**
**5th year**
**Fathima Zahra L.A.C**




## Today's Reality

Big houses, but small family.
More degrees, but less common sense.
Advanced medicine, but poor health.
Touched the moon, but neighbors unknown.
High income but, less peace of mind.
High IQ, but fewer emotions.
Good knowledge, but less wisdom.
Number of affairs, but no true love.
Lot of friends in face book but no best friends.
Lots of human, but less humanity
Costly watches, but no time.

**M.R.F. Azmira**
**Grade 9 – E**
**Zahira College Mawanella.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# The blind boy

O say what is that thing called light,
Which I must never enjoy,
What are the blessings of the sight?
O tells your poor blind boy.

You talk of wondrous things you see,
You say the sun shines bright,
I feel him warm
but how can he make it day or night?

My day or night myself I make,
Whenever I sleep or play,
And could I ever keep awake
With me were always day.

Then let not what I cannot have,
My peace of mind destroy,
While thus, I sing, I am a king,
Although a poor blind boy

**Iqbal Fathima Jeza**
**Grade 11**
**Sumaiya ladies Arabic College.**



# My loving SISTER

Hi friends! This is my loving little sister Hadhiya Deen. She is the last kid in our little family. She has round face and strait hair. My little sis is fair and beautiful. She is in grade two. She goes to B/Al Ilma Muslim vidyalaya. She is clever in studies and extracurricular activities. Her favorite subjects are Tamil and maths. She likes to eat noodles. She is fond of ice cream and wattalappam too. Mother always makes them for her. She prefers to play hopscotch and computer games with me. After madrasa we play together. I want her to pass all the exams in her life and gain rewards. Her ambition is to be a doctor. I pray from Allah to fulfill her goal. Thanks for Allah for giving me such a lovely sister. I love her so much.

**Athaaf Deen**
**Grade -06**
**B/Al Ilma M. V, Gurutalawa.**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

## I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குட்டிக்கதை

மன நோயுற்ற ஒருவன் மனோதத்துவ மருத்துவரிடம் அழைத்து வரப்பட்டான். அவனது நோய் பற்றி விளக்கம் கேட்டதற்கு அவன் தந்தை சொன்னார்,

''இவன், தான் இறந்து விட்டதாகக் கூறிக் கொண்டிருக்கிறான். எங்காவது வெளியே போகச் சொன்னால் இறந்தவன் எப்படி வெளியே செல்ல முடியும் என்று கேட்கிறான். எதைச் சொல்லி சமாதானப்படுத்தினாலும் அதை ஏற்க மறுக்கிறான். அதனால்தான் உங்களிடம் அழைத்து வந்தோம்.''

மருத்துவரும், ''இது ஒன்றும் பெரிய விடயமில்லை. நான் அவனை எளிதில் சரி செய்து விடுவேன்'' என்றார்.

பின்னர் அவர் அவனிடம் திருப்பிக் கேட்டார், ''இறந்த மனிதனுக்கு உடலிலிருந்து இரத்தம் வருமா?''

அதற்கு அழைத்து வரப்பட்டவன் சொன்னான், ''வராது.''

மருத்துவரும் ஒரு கத்தியை எடுத்து அவன் உடலில் இலேசாகக் கீற இரத்தம் பீறிட்டது. அவன் குடும்பத்தினர் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

மருத்துவர், ''பார்த்தாயா உன் உடலிலிருந்து இரத்தம் வருகிறது. எனவே, நீ இறக்கவில்லை, புரிகிறதா?'' என்று கூறினார். அவன் மிக அமைதியாகச் சொன்னான்.

''இதுவரை நான் இறந்தவர்கள் உடலிலிருந்து இரத்தம் வராது என்று நம்பி வந்தேன். இப்போதுதான் தெரிந்து கொண்டேன், இறந்தவர் உடலிலிருந்தும் இரத்தம் வரும் என்று.'' வைத்தியர் திரு திரு என அங்குமிங்கும் பார்த்தார்.

# 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் - 2015

### நிக/ அபுக்காகம முஸ்லிம் மகா வித்தியாலயம்



பீ.எம்.எப். பஸ்லா
167



என்.பீ. நிப்லா
159



ஏ.சீ. அஸ்பாத்
158

### பொ/அல்அஸ்ஹர் மகா வித்தியாலயம்



ஆனந்தன் மதுசியா
154

**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. ஹஸரத் சுஹைப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்
2. ஸஜதா திலாவத்
3. நபில் முத்லக்
4. முஸ்லிமா அல்லது முஸ்லிமதுன்
5. கந்தக் யுத்தம்
6. பெரிய தந்தையாகிய அபூதாலிப் அவர்கள்
7. ஹிஜ்ரி 35 இல்
8. அப்துர் ரஷ்மான் இப்னு மல்ஜம்
9. 6
10. 7
11. வஹ்லி இப்னு ஹர்ப்
12. சுருக்கித் தொழும் தொழுகை
13. தக்வா
14. 3 இரவுகள்
15. ஆமில்
16. கைபர் யுத்தம்
17. 12 வருடங்கள்

**பொது அறிவு**

1. 16.09.2000 இல்
2. 1989
3. இரண்டாம் எலிசபத் மகாராணி
4. 1970 இல்
5. மீரா லெப்பை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 05

அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்ததெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மானவர்மன் கி.பி. 684 இல் பதவியேற்றதைத் தொடர்ந்து இரண்டாம் இலம்பகர்ண மரபு அரசுரிமை பெற்றது. இம் மரபு 5 ஆம் மகிந்தன் (கி.பி. 1029) வரை தொடர்ந்தது. சுமார் இரண்டு நூற்றாண்டுகள் நீடித்த இக்காலப் பகுதியில் 26 மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர். இந் நூற்றாண்டுகள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் சிக்கல் நிறைந்ததாகவே அமைந்தன. மானவர்மனின் புதல்வர்களான 5 ஆம் அக்கிரபோதி, 2 ஆம் காசியப்பன், 1 ஆம் மகிந்தன் ஆகியோரது காலங்கள் நல்லாட்சிக்குரிய காலங்களாக அமைந்தன. அதனைத் தொடர்ந்து வந்த 2 ஆம் மஹிந்தன் (கி.பி. 777-797) முதல் அரசுரிமைப் போட்டிகளும் போராட்டங்களும் உருவெடுத்தன.

கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் 3 ஆம் மஹிந்தன் (801-804) முதல் 2 ஆம் உதயன் (கி.பி. 887-898) வரை 7 மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர். இக்காலப் பிரிவில் இலங்கை அரசியல் சிக்கல் நிறைந்ததாகவே அமைந்தது. இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் அரசியல் போர்களும் இலங்கையிலும் தாக்கம் செலுத்தின. அவ்வாறே உள்நாட்டுப் பிரச்சினைகளும் அதிகமாகக் காணப்பட்டன. எனவே, தேசியப் பொருளாதாரத்தை விவசாய உற்பத்திகள் மூலம் கட்டியெழுப்பும் வாய்ப்பு இக்கால மன்னர்களுக்குக் கிடைக்கவில்லை. தமது அரசியல் ஸ்திரத் தன்மையைப் பாதுகாப்பதே அவர்களது பிரதான பணியாக அமைந்தது. எனவே, தேசிய பொருளாதாரம் வணிகத்தையே பிரதான அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதனைக் கொண்டு நடத்தியவர்களாக முஸ்லிம்களே இருந்துள்ளனர்.

இக்கால வணிகம் பற்றிய குறிப்புகள் இதனைக் காட்டுகின்றன.

இலங்கை பற்றிய அறபுப் பயணிகளின் முதல் குறிப்பு 9 ஆம் நூற்றாண்டிலேயே கிடைக்கின்றது. சுலைமான் தாஜுடீன் குறிப்பு இந்த வகையில் முதன்மையாகும். சுலைமான் தாஜுதீன் கி.பி. 800-850 க்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையை தரிசித்த அறபுப் பயணி ஆவார். இவரது பிரயாண அனுபவங்களை இவர் கூற அபூ ஸெய்த் அஸ்ஸிராபி என்பவர் ''ஸில்ஸிலதுத் தவாரீன்'' எனும் நூலாக எழுதியுள்ளார். இலங்கையின் முத்துக் குளிப்பு, கடல் வளம், இரத்தினக் கல் தொழில் என்பவை பற்றிய குறிப்புக்களை அவர் தந்துள்ளார். அக்காலத்தில் இலங்கையில் இரு மன்னர்கள் இருந்ததாக அவர் குறிப்பிடுகின்றார். சுலைமான் இலங்கையை தரிசித்த காலப் பிரிவு பற்றிய மிகச் சரியான கணிப்பீடு இன்மையினால் அம்மன்னர்கள் பற்றி உறுதியாக கூற முடியாதுள்ளது. 3 ஆம் மஹிந்தன் (801-804) முதல் 1 ஆம் சேனன் (833-853) வரை ஐந்து மன்னர்கள் இக்காலப் பிரிவில் இருந்துள்ளனர். பாண்டிய படையெடுப்புகள் இக்காலப் பிரிவில் நடந்துள்ளன. எனினும், இக்காலப் பிரிவில் வெளிநாட்டு வணிகம் சிறப்பாக நடைபெற்றுள்ளமையை சுலைமானின் குறிப்புகள் காட்டுகின்றன.

10 ஆம் நூற்றாண்டில் அல்-மஸ்ஊதி, இப்னு ஷஹ்ரயார், இப்னு வஹப் போன்ற அறபுப் பயணிகள் இலங்கைக்கு வந்து சென்றுள்ளனர். இவர்களது குறிப்புகள் இக்காலப் பிரிவில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட வாசனைத் திரவியங்கள், பெறுமதியான பலகைகள், இரத்தினக் கற்கள் அரசர்களாலும் பிரபுக்களாலும் பயன்படுத்தப்பட்ட கித்துள் மது, மருத்துவப் பொருட்கள், இரும்பு உற்பத்திப் பொருட்களை மேற்கத்திய சந்தைகளில் முஸ்லிம்களே சந்தைப்படுத்தினர் என கலாநிதி லோனா தேவராஜா என குறிப்பிடுகிறார். இப்னு ஷஹ்ரயார் தரும் குறிப்பொன்று இவ்வணிக வலிமைக்கு சான்றாக அமைகின்றது. இலங்கையில் இருந்து ரூமானுக்கு சரக்குகளை ஏற்றிக் கொண்டு ஒரு கப்பல் வந்ததும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொருட்களுக்கு இறக்குமதி வரியாக ஆறு இலட்சம் தீனார்கள் அறவிடப்பட்டதாக குறிப்பிடுகிறார். இத்தகவலின் மிகச் சரியான உண்மைத் தன்மை பற்றிய சந்தேங்கள் இருப்பினும் பாரிய அளவிலான வணிகம் நடைபெற்றுள்ளமையை இது காட்டுகின்றது.

கி.பி. 9,10 ஆம் நூற்றாண்டுகளில் குறிப்பிடத்தக்க முஸ்லிம் குடியேற்றங்கள் இலங்கையின் கரையோர நகர்களில் இருந்துள்ளன. இதனை அகழ்வாராய்ச்சி சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. அனுராதபுர இராசதானியின் முக்கிய துறைமுகமாக விளங்கிய மாந்தை துறைமுகத்தின் அண்மையில் உள்ள பிரதேசங்களான திருக்கேஸ்வரம், புளியாந் தீவு, எல்லுப் பிடி ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட மீஸான் கற்கள் இதற்கு சான்றாக உள்ளன.

புகழ் பூத்த அறபு வரலாற்றாசிரியரான கதீப் அல் பக்தாதி 'தாரீக் பக்தாத்' எனும் நூலில் தரும் தகவல் கி.பி. 9 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இலங்கை முஸ்லிம்கள் பற்றிய முக்கிய செய்தி ஒன்றைக் குறிக்கின்றது. கி.பி. 877 இல் பக்தாத் நகரில் அப்துர் றஹ்மான் பின் ஹாதிம் அல்-ஸைலானி, இஸ்மாஈல் பின் முஸ்தபா அல்-கொழும்பவி எனும் பெயரில் இரு அறிஞர்கள் இருந்ததாக குறிப்பிடுகிறார். இவர்கள் இலங்கையை சேர்ந்தவர்கள் என்பதற்கு அவர்களது பெயர்களோடு இணைந்துள்ள ''ஸைலானி'' (இலங்கையை சேர்ந்தவர்) கொழும்பவி (கொழும்பைச் சேர்ந்தவர்) எனும் அறபுப் பிரயோகங்கள் சான்றாக அமைகின்றன.

இக்காலப்பிரிவு இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கிய காலப்பிரிவாகும். 2 ஆம் சேனன் (கி.பி. 853-887) இலங்கையின் மன்னனாகத் திகழ்ந்தான். இம்மன்னன் பாண்டி நாட்டின் மீது படையெடுத்து வெற்றியைப் பெற்றான். இவனது தளபதியாகிய குட்டகன் மதுரை வரை படை நடத்திச் சென்று வெற்றியடைந்ததை 2 ஆம் சேனனின் கல் வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இம்மன்னனது காலப்பிரிவில் பக்தாதுடன் முஸ்லிம்கள் உறவு கொண்டிருந்தமையும் வணிகத்துறை அல்லாத கல்வித் துறையிலும் முஸ்லிம்கள் ஈடுபாடு காட்டியுள்ளமையையும் காண முடிகின்றது.

10 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் கொழும்பு முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசமாகவும் மஸ்ஜித் ஒன்றை நிர்மாணித்து ஆன்மிகக் கடமைகளை நிறைவேற்றுபவர்களாக வாழ்ந்துள்ளனர் என்பதற்கும் ''கொழும்பு சிலாசனம்'' சான்றாக உள்ளது. இக்காலப் பகுதியில் கொழும்பில் வாழ்ந்த முஸ்லிம்களின் மார்க்க விடயங்களுக்கு வழிகாட்டுவதற்காக அப்பாஸிய கலீபா அல் - முக்ததிர் (907-932) காலத்தில் காலித் இப்னு பகாயா என்ற மார்க்க அறிஞர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் இங்கு வந்து மஸ்ஜித் ஒன்றை நிர்மாணித்து சன்மார்க்கப் பணி புரிந்தார். அவர் மரணித்த போது அவரது அடக்கஸ்தலத்தில் நடுவதற்காக அப்பாஸிய கலீபா அல் மூதிஃ (கி.பி. 946 - 974) காலத்தில் அவரது விபரங்கள் அடங்கிய மீஸான் கல் இலங்கைக்கு அனுப்பப்பட்டு நடப்பட்டது. இக்கல் இன்னும் கொழும்பு அருங்காட்சியகத்தில் உள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் காலித் இப்னு பகாயா இலங்கை வந்த காலத்தில் 4 ஆம் தம்புலன் (கி.பி. 924-935) இலங்கையை ஆட்சி செய்து கொண்டிருந்தான். அவர் மரணித்தபோது 4 ஆம் உதயன் (கி.பி. 946-954) ஆட்சி செய்தான்.

இவ்விரு மன்னர்களதும் காலம் இலங்கை ஒரு வலிமை பெற்ற நாடாகத் திகழவில்லை. தென்னிந்திய பாண்டிய, சோழ அரசியல் முரண்பாடுகள் இலங்கையைப் பாதித்தன. அரசியல் சிக்கல்களும் ஊழல்களும் மலிந்திருந்தன. எனினும், இதற்கு முந்திய காலங்களைப் போலவே சர்வதேச வணிகம் முஸ்லிம்களால் கவனிக்கப்பட்டதனால் பாரிய பொருளியல் சிக்கல்கள் காணப்படவில்லை. முஸ்லிம்கள் இந்த அரசியல் சிக்கல்களுக்கு மத்தியிலும் பக்தாதுடன் உறவு பேணி வந்துள்ளனர். கொழும்பு சிலாசனம் பின்வரும் முக்கிய செய்திகளை வெளிக் கொணர்வதாக கலாநிதி லோனா தேவராஜா குறிப்பிடுகின்றார்.

1. கொழும்பில் கணிசமான முஸ்லிம்கள் வாழ்ந்துள்ளமையையும் தமது மார்க்க விவகாரங்களுக்கு பக்தாத் கலீபாவிடம் உதவி கோருமளவு வலிமை பெற்றவர்களாகவும் இருந்துள்ளனர்.
2. முஸ்லிம்கள் எங்கு இருந்தாலும் இஸ்லாமிய கிலாபத்துக்கு கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து பக்தாதுடன் உறவு பூண்டிருந்தனர்.
3. முஸ்லிம்கள் சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற உணர்வையும் உரிமையையும் பெற்றிருந்தனர்.
4. இலங்கையின் சுதேசிகள் தமது சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பெற்றிருந்த உரிமையைப் போலவே முஸ்லிம்களும் பெற்றிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# திசைமாறிய தீர்மானம்



''உம்மா... உம்மா... உம்மோவ்...'' என்று வீதியிலிருந்தே தாயை அழைத்தவாறு வீட்டுக்குள் நுழைந்த றிஸ்லான் தனது புத்தகப் பையை சுவரிலிருந்த ஆணியில் மாட்டி விட்டுத் தாயிடம் ஓடி வந்தான்.

''உம்மா இப்ப ஒங்களுக்கு நல்லமா...?'' தாயின் நெற்றியிலே கை வைத்துப் பார்த்த அந்த எட்டு வயதுப் பிஞ்சுக்குக் கண்கள் கலங்கிவிட்டன.

''மகன், ராஜா... ஸ்கூல்ல இருந்து வந்துட்டாயா?'' எனக் கேட்டவாறு கண்களைத் திறந்து தன் அன்புச் செல்வத்தை நோக்கினாள், அன்னை நஸீரா.

அவன் உடையில், உடலில் அனைத்திலுமே வறுமையின் முத்திரை பதியப்பட்டிருந்தது. நீண்டதொரு பெருமூச்சுடன் பார்வையை வாசல் பக்கம் ஓட வைத்தாள் நஸீரா. அங்கே... அவள் ஈன்றெடுத்த அடுத்த இரண்டு பிள்ளைகளும் ஒட்டிய வயிற்றுடன் விளையாடிக் கொண்டிருந்தன.

கடும் காய்ச்சல்; மூன்று நாட்களாக அவளை படுக்கையில் தள்ளிவிட்டது. இல்லையென்றால் இந்நேரம் எவர் வீட்டிலாவது இயந்திரமாக இயங்கிக் கொண்டிருப்பாள். ஆம்! கணவனை இழக்க நேரிட்ட பின் வீடு வீடாகப் போய் வேலைகள் செய்தே தன் பிஞ்சுக் குழந்தைகள் நான்கையும் அவள் வளர்த்து வருகிறாள். மூன்று தினங்களாக அவள் நோய்ப்பட்டதால் குழந்தைகள் மூன்று வேளைகளும் பட்டினி கிடக்க நேர்ந்தது.

பாவம் அந்த விதவைத் தாய்க்கும் குழந்தைகளுக்கும் உதவிக் கரம் நீட்ட உணர்வுள்ள எந்த ஜீவனுமே இருக்கவில்லை. நஸீராவின் கணவனுடைய கூடப் பிறந்த நானா கூட ஊரிலே பெரிய பணக்காரராக ஜொலிக்கிறார். இருந்துமென்ன...? அவர் இவர்களை திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை.

''உம்மா... பசியும்மா... சோறு தாங்கம்மா...!'' என்று எதையுமே உணராத சின்னஞ்சிறுசுகள் மூன்றும் தாயைப் படாத பாடு படுத்தின. இதைப் பார்க்கச் சகியாத மூத்தவன்,

''உம்மா... பெரியப்பாக்கிட்டப் போய்த்து சல்லி வாங்கிக் கொண்டு வரவா...?'' ஆவலுடன் கேட்டான்.

''வேணாம் மகன்... அவரு தாரல்ல. அங்கே போக வேணாம்...!'' தாய் மறுத்தும்,

''இல்லம்மா... கேட்டுப் பார்த்துட்டு வாறனே...!'' தாயின் பதிலுக்கு கூடக் காத்திருக்காத றிஸ்வான், வாகனம் ஓட்டுவதுபோல பாவனை செய்து கொண்டு 'பீப்... பீப்...' எனச் சத்தமிட்டவாறு ஓட்டம் பிடித்தான்.

பெரியப்பாவின் மாடி வீட்டுக்கு முன் 'பிரேக்' போட்டு ஓட்டத்தை நிறுத்தியவன், மூச்சிறைக்க நின்றான். பின் தயங்கித் தயங்கி உள்ளே பார்த்தான். போவோமா...? வேண்டாமா...? என முடிவெடுப்பதற்குள் உள்ளேயிருந்து வந்த கார் அவனை நெருங்கி விட்டது. டிரைவர் ஆசனத்தில் அமர்ந்திருந்தவரே பெரியப்பாதான்.

''டேய்... நீயா... இஞ்ச என்னத்துக்கு வந்த...?'' என்று அவர் கேட்காவிட்டாலும், அவரின் கடுமையான பார்வை இப்படிக் கேட்டது.


''பெரியப்பா உம்மாக்கு சுகமில்ல... நாங்க மூணு நேரமும் பட்டினி. அதுதான் உங்களுக்கிட்ட எதையாவது வாங்கிக் கொண்டு போகலாம்...'' என்று அவன் கூறி முடிப்பதற்குள்...

''கொடுத்து வச்சவங்க மாதிரி வாங்க வந்த... ஆளப்பாரு ஆள... இப்ப கைல சல்லி இல்ல... போ... போ... நான் ஒரு அவசரப் பயணம் போற...'' விரட்டாத குறையாக அவர் கூறியபோது ஸ்தம்பித்துப் போனான். கார் பறந்துவிட்டது. கார் மறையும் வரை வீதியையே வெறித்துப் பார்த்தவனின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. இதயம் விம்மியது.

பிற்பகல் மூன்று மணியாகிவிட்டது. சந்தையிலிருந்து சாமான் கூடையுடன் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றபாயுத்தீன் ஆஷிக் முஹம்மட்
பாதிஹ் கல்வி நிறுவனம்

கொண்டிருந்தான் ரிஸ்வான். கையிலுள்ள கூடை கனத்திருந்ததால் கை வலித்தது. கூடையை மற்றக் கைக்கு மாற்றிக் கொண்டவன் மெதுவாக நடந்தான். சும்மா கிடைத்தவற்றை விட்டு வர மனம் வராததால் எல்லாவற்றையும் தூக்கிக் கூடையிலே போட்டிருந்தான். கையிலுள்ள கூடையின் சுமையினாலும் பசிக் களைப்பினாலும் தொடர்ந்து நடக்கும் சக்தி அந்தப் பிஞ்சுக் கால்களுக்கு இருக்கவில்லை. எனவே, சோர்ந்து போய் நடந்து கொண்டிருந்தான், அவன்.

அப்போது பாதையோரமாக அமைந்திருந்த அநாதை இல்லத்தின் பக்கமாக ஆரவாரமும் பரபரப்பும் இருப்பதைக் கண்டு அந்த இடத்தில் சிறிது நேரம் தாமதித்துப் போக நினைத்தவனாக, அங்கேயே நின்று விட்டான். மேடை அழகாகத் தெரிந்தது. மேடைக்குக் கீழே பார்வையாளர்கள் நிறைந்திருந்தார்கள். மேடையில் அவனின் பெரியப்பா சித்தீக் ஹாஜியார் உட்கார்ந்திருந்தார். எங்கிருந்துதான் அவனுக்கு உற்சாகம் வந்ததோ தெரியவில்லை. அவனும் ஒருவாறு முண்டியடித்துக் கொண்டு போய் முன்னேறி மேடையின் அருகிலேயே இடம் பிடித்துக் கொண்டான்.

அப்போது விழாவின் தலைவர் மேடையில் தோன்றி,

''இன்று எமது அநாதை இல்லத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நடைபெற இருக்கிறது. விழாவுக்கு பிரதம அதிதியாக பிரபல சமூக சேவையாளரும் கொடை வள்ளலுமாகிய சித்தீக் ஹாஜியார் அவர்கள் கலந்து கொள்வதையிட்டு பெருமையடைகிறோம். அநாதைகள் மீது மிகவும் அன்பு கொண்ட இவரின் பிறந்த நாளும் இன்றாக இருப்பதால் எமது இல்லப் பிள்ளைகளுக்கு உணவுப் பொதிகளையும் இவர் வழங்கவுள்ளார். மேலும், எமது அநாதை இல்லத்தின் வளர்ச்சிக்காக இருபதாயிரம் ரூபா பணம் நன்கொடையாகவும் வழங்க முன்வந்திருக்கிறார்...!'' சித்தீக் ஹாஜியாரைப் பற்றி தொடர்ந்தும் புகழ்ந்து கொண்டே போனார் தலைவர்.

''கூடப் பிறந்த தம்பிட அநாதைப் பிள்ளைங்க நாங்க பட்டினியால கஷ்டப்படுகிற நேரம் பேருக்கும் புகழுக்கும் இங்கு வந்து அள்ளிக் கொடுக்கிறாரு. இவங்களுக்கு கொடுத்தா பேப்பர்ல வரும். எங்களுக்குத் தந்தா எந்தப் பேப்பர்ல வரும்...?'' என மனதுக்குள் கவலைப்பட்டுக் கொண்டவனின் கால்கள் நிலத்திலே நிற்க மறுத்தன. மேடையை இறுகப் பற்றியிருந்த கைகளும் தளர, கீழே விழுந்தான்.

மறுகணம் கூட்டத்திலே ஒரே பரபரப்பு. நிகழ்ச்சிகள் தடைப்பட்டன. மேடையில் இருந்தவர்களுடன் பிரதம அதிதியும் கீழே எட்டிப் பார்த்தார். அங்கே சிறுவன் ஒருவன் மயங்கிக் கிடக்க அவன் பக்கத்திலே அழுகிய தக்காளிப் பழங்களும் பழுதடைந்த மரக்கறி வகைகளும் சிதறிக் கிடந்தன. சிறுவனை இனங்கண்டு கொண்ட பிரதம அதிதியின் முகம் பேயறைந்ததைப் போல் இருண்டு இறுகிப் போய் விட்டது.

முதலுதவிகள் மும்முரமாக செய்யப்பட்டன. இருப்பினும் சிறுவனுக்கு உணர்வே திரும்பவில்லை. உடனே டாக்டர் வரவழைக்கப்பட்டார். பரிசோதித்துப் பார்த்த டாக்டர் உதட்டைப் பிதுக்கியபடி,

''பட்டினி கிடந்த உடம்பு... அதோட பசிக் களைப்புல விழுந்திருக்கு... விழுந்த வேகத்தில இந்தக் கல்லுல தல மோதி பலமா அடிபட்டு உயிர் பிரிஞ்சிட்டுது...!'' என டாக்டர் கூறி முடித்தபோது சித்தீக் ஹாஜியார் கூனிக் குறுகி நின்றார். விழிகள் வெளியே தெரிய மூடியிருந்த சிறுவனின் கண்கள் அவரையே பார்த்து நியாயம் கேட்பதாக அவருக்கு தோன்றியது.

''பெரியப்பா... உம்மாக்கு சுகமில்ல... நாங்க மூணு நேரம் பட்டினி... அதுதான் ஒங்களுக்கிட்ட ஏதாவது வாங்கிக் கொண்டு போக வந்த...'' அந்த வார்த்தைகள் அவரின் காதுகளில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டேயிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சந்திப்பு :
ஷபீக் ஹூஸைன், ஏ.எச். ரியாஸ்

# எதிர்காலத்தில் ஒரு விஞ்ஞானியாக வரவேண்டும் என விரும்புகிறேன்

## மாவனல்லை ஸாஹிரா கல்லூரி மாணவன் இஸட்.எம்.எம். அய்யாஷ்

**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை புத்தாக்குனர் கமிஷன் மற்றும் ஒஸ்டன் நிறுவனம் இணைந்து 2015.10.18 ஆம் திகதி கொழும்பில் நடத்திய தேசிய மட்ட ரோபோ ஒலிம்பியாட் போட்டியில் கனிஷ்ட பிரிவில் கலந்து கொண்ட இஸட். எம்.எம். அய்யாஷ் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட் டார். இவரை அகரம் சந்தித்தபோது எங்களுடன் பகிர்ந்து கொண்டவை...**

**அகரம்:** உங்களைப் பற்றி ஓர் அறிமுகம்?

**அய்யாஷ்:** எனது பெயர் இஸட்.எம்.எம். அய்யாஷ். நான் மாவனல்லை ஸாஹிரா கல்லூரியில் தரம் 9 இல் கல்வி கற்கிறேன். எனது தந்தையின் பெயர் இஸட்.எம். ஸம்னி. தாயின் பெயர் எம்.எச். ஸம்ஸியா. இருவரும் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். எனக்கு ஒரு சகோதரியும் உள்ளார்.

**அகரம்:** உங்களது இந்த கண்டுபிடிப்பைப் பற்றிக் கூற முடியுமா?

**அய்யாஷ்:** என்னைப் பொறுத்தவரையில் கடினமான விடயம் என்று ஒன்று இருந்தால் அதை எவ்வாறு இலகுபடுத்துவது என்று சிந்திப்பேன். அந்த வகையில் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சும் ஒஸ்டன் நிறுவனமும் இணைந்து நடத்திய ரோபோ ஒலிம்பியாட் போட்டியில் எனது படைப்பான ரோபோவை சமர்ப்பித்தேன். இந்த ரோபோவானது 8 பொருட்களை வைத்தால் அதில் 7 பொருட்களை கண்டறியக் கூடியது. அந்த ரோபோ பல பாராட்டுக்களை எனக்குப் பெற்றுத் தந்தது. அது மாத்திரமன்றி, இப்போட்டியில் வெற்றி பெற்றதோடு எதிர்வரும் வருடம் சீனாவின் தலைநகர் பீஜிங்கில் சர்வதேச ரீதியில் நடைபெறவுள்ள போட்டிக்கு செல்லவும் நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன் என்பது என்னை மகிழ்விக்கிறது. எதிர்காலங்களில் இன்னும் இவை போன்ற ரோபோக்களை உருவாக்க பல திட்டங்களையும் நான் வைத்துள்ளேன்.

**அகரம்:** உங்களது கண்டுபிடிப்பு முயற்சிகளுக்கு வழிகாட்டியது எது?

**அய்யாஷ்:** உண்மையில் எனக்கு புகழையும் பாராட்டையும் பெற்றுத் தந்த இந்த ரோபோ எனது 5 ஆவது படைப்பாகும். இதற்கு முன்னால் நான் 4 படைப்புக்களை உருவாக்கியிருக்கிறேன்.

தரம் 6 இல் கல்வி கற்கும்போது ஒரு Super Duster ஐ உருவாக்கினேன். தரம் 7 இல் கற்கும்போது Mechanic Arm ஒன்றை செய்து பாராட்டுக்களைப் பெற்றேன். இதில் உள்ள குறைகள் பலரால் சுட்டிக் காட்டப்பட்டன. பிறகு அந்தக் குறைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்து எனது 3 ஆவது படைப்பையும் உருவாக்கினேன். அதேபோன்று வீடுகளில் சமைப்பதற்கு பயன்படுத்தப்படும் சமையல் வாயு (Gas) முடிவுறும் முன்பதாக அதனை சுட்டிக்காட்டும் Gas Indigator ஒன்றைக் கண்டுபிடித்தேன். வாயு நிறைவு பெற 1 kg இருக்கும் நிலையை இந்த கருவியைக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிய முடியும். இது வீட்டு சமையலறைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நான் நம்புகிறேன். இது எனது 4 ஆவது படைப்பாகும்.

எனது இந்த படைப்புகளுக்கு ஊக்கமளித்தது எனது வீட்டுச் சூழலே. எனது தாயும் தந்தையும் ஒரு பணியை மேற்கொண்டால் அதனை எவ்வாறு இன்னும் இலகுவாகச் செய்யலாம் என்று சிந்திப்பார்கள். அது என்னையும் சிந்திக்க வைத்தது. அதேபோன்று எனது பெற்றோர்களினதும் ஆசிரியர்களதும் ஆர்வமூட்டல்கள் என்னை உற்சாகப்படுத்தின. குறிப்பாக எனது தந்தையின் நண்பர் ஒரு பொறியியலாளர். அவர் என்னை அதிகமாக உற்சாகப்படுத்தினார். ஆகவே, ஆரம்பத்தில் இருந்தே எதனையும் இலகுபடுத்திச் செய்வது என்ற விடயமே என்னை இவ்விடத்துக்கு கொண்டுவந்துள்ளது என நான் நினைக்கிறேன்.

நான் இந்த நிலைக்கு வர உதவிய அல்லாஹ்வுக்கு நன்றி கூற ஆசைப்படுகிறேன். அத்தோடு எனது பெற்றோர், உறவினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், இந்தப் போட்டி நிகழ்வுகளை நடத்தும் ஒஸ்டன் நிறுவனம் ஆகியோருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**அகரம்:** மாணவர் சமூகத்திற்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

**அய்யாஷ்:** உண்மையில் மனிதர்களால் முடியாதது என்று ஒன்றும் கிடையாது. நாம் முயற்சித்தால் எதனையும் அடைந்து கொள்ளலாம். எனது முயற்சியே எனக்கு இந்தப் பாராட்டையும் பரிசில்களையும் பெற்றுத் தந்தது. எனது சிறுவயதில் இருந்தே



ஒரு விடயத்தை அழகாக நேர்த்தியாக செய்ய பழகிக் கொண்டேன். அதேபோன்று தேவையற்ற விடயங்களில் எனது நேரத்தை நான் கழிக்க விரும்புவதில்லை. அதே சமயம் படிக்கும் நேரத்தில் படிப்பைத் தவிர வேறு எதையும் செய்ய மாட்டேன். உரிய நேரத்துக்கு உரிய விடயத்தை செய்வதற்கே எனது பெற்றோர்கள் என்னை ஆர்வமூட்டுவார்கள். எனவே, நான் எனது சக நண்பர்களுக்கு கூற விரும்புவது

- ❖ **சிறுவயதில் இருந்தே ஒரு விடயத்தை அழகாக நேர்த்தியாக செய்ய பழகிக் கொண்டேன்.**
- ❖ **தேவையற்ற விடயங்களில் எனது நேரத்தை நான் கழிக்க விரும்புவதில்லை.**
- ❖ **படிக்கும் நேரத்தில் படிப்பைத் தவிர வேறு எதையும் செய்யமாட்டேன்.**
- ❖ **உரிய நேரத்துக்கு உரிய விடயத்தை செய்வதற்கே எனது பெற்றோர்கள் என்னை ஆர்வமூட்டுவார்கள்.**



''முயற்சியுங்கள்; பெற்றுக் கொள்வீர்கள்'' என்பதைத்தான்.

**அகரம்:** எதிர்கால இலட்சியம் என்னவாக இருக்கிறது?


**அய்யாஷ்:** எனக்கு பல ஆசைகள் இருக்கின்றன. கோள்களுக்கு ரொக்கெட் அனுப்ப வேண்டும்; பல ரோபோக்களை செய்து வளிமண்டலத்துக்கு அனுப்ப வேண்டும் என்று பல ஆசைகள் உள்ளன. இந்த ஆசைக் கனவுகளை நிறைவு செய்ய எதிர்காலத்தில் ஒரு விஞ்ஞானியாக வரவேண்டும் என விரும்புகிறேன். இதற்கான ஒவ்வொரு படிமுறையையும் நான் இப்போதிருந்தே அடைந்து வருகிறேன் என்பதைக் கூற விரும்புகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 ஆம் ஆண்டு



- இலங்கையின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் 2015 நவம்பரில் நிதி அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
- இது இலங்கையின் 70 ஆவது வரவு செலவுத் திட்டம் என்பதோடு நிதி அமைச்சர் என்ற வகையில் தேசிய அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டமுமாகும்.
- 2015 நவம்பரில் பிரதமரால் முன்வைக்கப்பட்ட கொள்கைக் கூற்றுக்கமைய 2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் உபாயங்கள் காணப்படுகின்றன. அவையாவன:
  - ஒரு மில்லியன் வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்.
  - வருமான மட்டங்களை விருத்தி செய்தல்.
  - கிராமிய பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்தல்.
  - கிராமிய மற்றும் தோட்டத் துறைகளிலும் நடுத்தர வகுப்பை சார்ந்தவர்களினதும் மற்றும் அரசாங்க ஊழியர்களினதும் ஆதன உரிமையை உறுதிப்படுத்தல்.
  - பரந்த மற்றும் உறுதி வாய்ந்த நடுத்தர வகுப்பினரை உருவாக்குதல்.
- 2016 ஆம் ஆண்டு பாதீட்டு விபரங்கள்
  - மொத்த வருமானம் ரூ. 2047 பில்லியன்
  - மொத்த செலவினம் ரூ. 2787 பில்லியன்
  - துண்டு விழும் தொகை ரூ. 740 பில்லியன்




திரு. பீ. உமா சங்கர்
B.Com (Jaf), M.Com (Kelaniya) (PDE) Spl.Trd.com, NDBF, Sri Lanka Technical College - Colombo

# தமிழக தொடர்மழை



- 2015 நவம்பரில் தமிழகத்தில் வரலாறு காணாத மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.
- தமிழகம், புதுச்சேரி ஆகிய பிரதேசங்கள் கூடிய ளவு பாதிக்கப்பட்டதன் காரணமாக ஏறத்தாழ 300 பேர்வரை பலியாகினர்.
- சென்னையில் கடந்த 1901 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதிக்கு பின்னர் பதிவான ஆகக் கூடிய மழைவீழ்ச்சியாக 330 மில்லி மீற்றர் காணப்படுகின்றது.

# உலகின் உயர்ந்த கட்டிடம்

- செங்கடல் நகரான ஜித்தாவில் கட்டப்பட்டுவரும் 170 மாடிகள் கொண்ட கிங்டம் டவர் (கோபுரம்) உலகின் மிக உயர்ந்த கட்டிடமாக அமையவுள்ளது.
- இதன்படி 3280 அடிகள் (1 கிலோ மீற்றர்) உயரம் கொண்ட இந்த கோபுரம் 2020 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்படும்.
- இதன் மூலம் தற்போது உலகின் உயர்ந்த கட்டிடத்திற்கான கின்னஸ் சாதனையை பெற்றிருக்கும் டுபாய் புர்ஜ் கலீபா கட்டிடத்தை இந்தக் கோபுரம் முறியடிக்கவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சுகாதார ஒன்றிய புகைத்தல் நிவாரணம் தொடர்பான 2015 ஆம் ஆண்டு விருது

World Health Organization

- 2015 டிசம்பரில் உலக சுகாதார ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட புகைத்தல் நிவாரணம் தொடர் பான 2015 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.
- இவ்விருதை சுகாதார போஷாக்கு மற்றும் தேசிய மருத்துவ அமைச்சர் டாக்டர் திரு. ராஜித சேனா ரத்ன அவர்கள் பெற்றுக்கொண்டார்.
- இவ்விருதை நாட்டின் தற்போதைய ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2013 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது.

# புர்கினா பாசோ 2 ஆவது சிவில் தலைவர்

- மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பாசோவில் சுதந்திரத்திற்கு பின்னர் பதவியேற்ற இரண்டா வது சிவில் தலைவராக ரொச் மார்க் கிறிஸ்டி யன் கபோரே விளங்குறார். அவர் 2015 ஜனாதி பதி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியா னார்.
- முன்னாள் பிரதமரான ரொச் மார்க் கிறிஸ்பியன் கபோரே இத்தேர்தலில் 53.2 சதவீத வாக்குக ளைப் பெற்றார்.
- புர்க்கினா பாசோவில் 2014 ஆம் ஆண்டு இடம் பெற்ற மக்கள் போராட்டத்தின் மூலம் அந்நாட் டில் 27 ஆண்டு காலமாக ஜனாதிபதியாக இருந்த பிளைஸ் கொம்பாரே பதவி கவிழ்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
- 1960 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற புர்க்கினா பாசோ பல முறை இராணுவ சதிப்புரட்சிகளை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விஷேட அமைச்சரவை பத்திரம்

- 2015 நவம்பரில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குதல் மற்றும் புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துதல் தொடர்பான விஷேட அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவைக்கு ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்தில், வெஸ்ற் மினிஸ்டர் முறை பிரஞ்சு முறையால் மாற்றீடு செய்யப்பட்டு தனி தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும், நாடாளுமன்றத்தை சாராத, நீண்ட ஆட்சிக் காலத்தை கொண்ட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்டது.
- 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் 7 ஆவது அத்தியாயம் 20 ஆவது உறுப்புரையில் 1 ஆம் பந்தி பின்வருமாறு கூறுகின்றது: ''இலங்கை குடியரசுக்கு ஜனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவரே அரசின் தலைவரும் ஆட்சித்துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவரும் ஆயுதம் தாங்கிய படைகளின் தலைவருமாவார். இவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைவராவார்.''

# பகல்-இரவு டெஸ்ட் கிரிக்கட் போட்டி

- 2015 நவம்பரில் 138 வருட கிரிக்கட் வரலாற்றில் முதன் முறையாக சர்வதேச அளவிலான டெஸ்ட் போட்டி பகல்-இரவு ஆட்டமாக நடைபெற்றது.
- அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து அணிகளுக்கு இடையேயான இந்த டெஸ்ட் போட்டி அவுஸ்தி ரேலிய நாட்டில் உள்ள அடிலெய்ட் மைதானத் தில் நடைபெற்றது.
- பொதுவாக கிரிக்கட்டில் சிவப்பு மற்றும் வெள்ளை நிறப் பந்துகளே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இப்போட்டியில் சொக்கபுரா நிறுவனம் பிரத்தி யேகமாக தயாரித்த பிங்க் நிற பந்துகளே பயன் படுத்தப்படுகின்றன.
- கிரிக்கட் போட்டிகளானவை ஆரம்பத்தில் டெஸ்ட் கிரிக்கட், 60 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் போட்டி, 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் போட்டி, இருபதுக்கு 20 போட்டி எனப் பல வடிவங்களாக மாற்றமடைந்து வந்துள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுக்களின் தலைவர்கள்

- ❖ தேர்தல்கள் ஆணைக்குழு - மஹிந்த தேசப்பிரிய
- ❖ எல்லை நிர்ணய ஆணைக்குழு - டீ. கனகரத்தினம்
- ❖ நிதி ஆணைக்குழு - யூ. பனிஹக்கார



# H3 N2 இன்புளூவென்ஸா வைரஸ்

- ❖ 2015 நவம்பரில் நாட்டில் நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக H3 N2 இன்புளூவென்ஸா வைரஸ் பரவியதாக தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்தது. கர்ப்பிணிப் பெண்கள், இளைஞர்கள், 65 வயதிற்கு மேற்பட்டோர் இவ் வைரஸ் தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறு வேண்டப்பட்டனர்.

# துருக்கி பொதுத் தேர்தல்



- ❖ ஐந்து மாதங்கள் மாத்திமே நீடித்த அரசாங்கத்திற்கு பின்னர் இடம்பெற்ற துருக்கிய நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சியான நீதி மற்றும் அபிவிருத்திக் கட்சி (ஏ.கே. கட்சி) 2015 நவம்பரில் மீண்டும் தனிப் பெரும்பான்மையை பெற்று தனித்து ஆட்சி அமைத்துள்ளது.
- ❖ இதன் பிரகாரம் ஜனாதிபதியும் ஏ.கே. கட்சியின் நிறுவனருமான தைய்யிப் அர்துகான் தலைமையிலான ஏ.கே. கட்சி 49.4% வாக்குகளைப் பெற்று 550 ஆசனங்களில் 316 ஆசனங்களையும் சுவீகரித்து இலகுவாக ஆட்சி அமைத்துள்ளது.
- ❖ இக்கட்சி கடந்த பதின்மூன்று வருடங்களில் 2015 ஜூனில் முதல் தடவையாக பெரும்பான்மை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

# எயார் பஸ் A321 விமானம்




- ❖ 2015 நவம்பரில் ரஷ்ய எயார்லைன்ஸுக்கு சொந் தமான எயார் பஸ் A321 விமானம் விபத்துக் குள்ளானதில் அதிலிருந்த 217 பயணிகளும் உயிரி ழந்தனர்.
- ❖ குறித்த விமானம் ஷர்ம் அல்ஷேக் நகரிலிருந்து ரஷ்யா நோக்கி பயணித்த வேளை எகிப்தி லுள்ள சினாய் தீபகற்ப பகுதியிலேயே வீழ்ந்து நொறுங்கியுள்ளது.
- ❖ இவ்விமானத்தை வீழ்த்தியதாக ஐ.எஸ். அமைப் புடன் தொடர்புடைய தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

# கொழும்பு பங்கு பரிவர்த்தனை

- ❖ 2015.12.03 இல் கொழும்பு பங்கு பரிவர்த்தனை 30 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடியது.
- ❖ இலங்கை பங்கு பரிவர்த்தனையின் கொடுக்கல் வாங்கல்கள் 19 ஆம் நூற்றாண்டிலேயே (1896 ஆம் ஆண்டில்) ஆரம்பமாகினாலும்கூட, உத்தி யோகபூர்வமாக 1985 ஆம் ஆண்டு கொழும்பு பிணையங்கள் பரிமாற்றம் என்ற பெயரில் ஆரம் பிக்கப்பட்டது.
- ❖ 1990 ஆம் ஆண்டில் கொழும்பு பங்கு பரிவர்த் தனை எனும் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது.
- ❖ 29 தரகு நிறுவனங்களுடன் தற்போது செயற்படு கின்றது.
- ❖ 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் உள்ளூரை சேர்ந் தவரோ அல்லது வெளிநாட்டவரோ எந்தப் பதவி நிலை வகிப்பவராக இருப்பினும் கொழும்பு பங்குச் சந்தையில் நிரற்படுத்தப்பட்டுள்ள 297 கம்பனிகளில் ஒன்றிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களிலோ முதலிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பி வந்தது எப்படி?



காலையில் எழுந்தவுடன் பெரும்பாலானோர் அருந்தும் பானங்களில் கோப்பியும் ஒன்று. கோப்பிச்செடி கண்டுபிடிக்கப்பட்டதைப் பற்றி வரலாற்று ரீதியான தகவல்கள் குறைவாகவே தென்படுகின்றன. ஆனால், பரம்பரை பரம்பரையாக சொல்லப்படும் ஒரு கதையின் மூலம் இச்செடி அரேபியாவில் முதல் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது எனத் தெரிகிறது.

அதாவது, ஓர் அரேபிய ஆட்டு இடையன் தனது செம்மறி ஆடுகளை ஓட்டிக் கொண்டு ஓர் இடத்தில் இரவு தங்கினான். அவனது ஆடுகள் அன்றிரவு உறங்காமலும் அதே சமயத்தில், சுறுசுறுப்புடனும் காணப்பட்டன. இதன் மர்மத்தை அறிய மறுநாள் காலையில் ஆடுகள் மேய்ந்த இடங்களை அந்த இடையன் பார்வையிட்டான். அப்போது ஒரு குறிப்பிட்ட செடியினை மேயும் ஆடுகள் சோர்வடையாமல் இருப்பதைக் கண்டான். அச்செடியின் இலைகளையும் கனிகளையும் நசுக்கி கசாயம் தயாரித்து அதை அருந்தியபோது அவனுக்கு உற்சாகம் ஏற்பட்டதாம் என்று அக்கதையில் கூறப்படுகிறது.

உலகிலேயே பெற்றோலுக்கு அடுத்தபடியாக விற்பனையாவது கோப்பிதான். இங்கிலாந்து நாட்டினர் பெரும்பாலும் பால் கலக்காத கறுப்பு கோப்பியையே விரும்பி அருந்துகின்றனர். ஆரம்ப காலத்தில் பிரான்ஸ் நாட்டின் சிறையில் இருந்த ஒரு கவிஞர் மூன்று கோப்பிச் செடிகளை மிக இரகசியமாக இங்கிலாந்திற்கு கடத்திச் சென்றார். ஏனென்றால், இது அக்காலத்தில் இராணுவ இரகசியத்திற்கு ஈடாக கருதப்பட்டு வந்தது. கோப்பி பானத்தில் கொபின் என்ற வேதிப்பொருள் அடங்கியுள்ளது. இந்த வேதிப்பொருளே நமது இரத்த ஓட்டத்தை தூண்டி அதன் மூலம் போலியான அதே சமயத்தில் தற்காலிகமான சுறுசுறுப்பை உண்டாக்குகின்றது.

## குட்டிக் கதை

*1961 இல் சீனா இந்தியாவின் சில பகுதிகளை ஆக்கிரமித்தது. அப்போது நேரு பிரதமராக இருந்தார். பாராளுமன்றத்தில் ஆக்கிரமிப்பு பற்றி ஏகப்பட்ட சலசலப்பு; வாதப்பிரதி வாதங்கள்.*

*அப்போது நேரு, ''சீனா சில பகுதிகளைப் பிடித்திருப்பது உண்மைதான். ஆனால், அவை ஒன்றுக்கும் பயன்படாத பகுதிகள். அங்கு புல் பூண்டு கூட முளைக்காது'' என்றார்.*

*உடனே சிறந்த பாராளுமன்றவாதியான மாவீர் தியாகி எழுந்து, ''இதோ, என் தலையைப் பாருங்கள்'' என்று கூறி தனது வழுக்கைத் தலையைக் காட்டினார். பின் அவர் கேட்டார், ''என் தலையில் கூட ஒன்றும் முளைக்கவில்லை. அதனால், அது பயனில்லாத பகுதி என்று சொல்வீர்களா?''*

*நேரு உட்பட அனைவரும் சிரித்து விட்டார்கள்.*

## எண்ணங்களின் வண்ணங்கள் - 07

**தலைப்பு : ஆற்றங்கரை**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு இறுவட்டுக்கள் (DVD) வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 ஜனவரி 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
மினுவாங்கொட, கம்பஹா வலயம்.
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

## கணினித்திரையை அழகுபடுத்துவோம்

3. Picture location, Solid Colours ஆக இருக்கும்போது உள்ள உரு கீழே தரப்பட்டுள்ளது. அவற்றில் காணப்படும் படங்கள் ஒன்றைத் தெரிவு செய்து Save changes என்ற பொத்தானை அழுத்துவதன் மூலம் கணினித்திரையில் நாம் தெரிவு செய்த உரு காட்சியளிப்பதைக் காணலாம்.



4. Picture location, Picture Library ஆக இருக்கும்போது உள்ள உரு கீழே தரப்பட்டுள்ளது. அவற்றில் காணப்படும் படங்கள் ஒன்றைத் தெரிவு செய்து Save changes என்ற பொத்தானை அழுத்துவதன் மூலம் கணினித்திரையில் நாம் தெரிவு செய்த உரு காட்சியளிப்பதைக் காணலாம்.



5. Picture potion Fill ஆக இருக்கும்போது நாம் தேர்ந்தெடுக்கும் உரு முழு கணினித்திரையையும் உள்ளடக்கியதாய் இருக்கும். Fit ஆக இருக்கும்போது மேலும் கீழும் கறுப்பு நிற இடைவெளிகளைக் கொண்டு காணப்படும்.

Stretch ஆக இருக்கும்போது தெரிவு செய்த உரு பெரிதாக்கப்பட்டு காணப்படும். Tile ஆக இருக்கும் போது நாம் தேரந்தெடுக்கும் உரு கணினித்திரையில் பலதாக காட்சியளிக்கும். Center ஆக இருக்கும் போது நாம் தேர்ந்தெடுக்கும் உரு கணினித்திரையின் மத்தியில் காட்சியளிக்கும்.




### கணினியில் Screen Saver ஐ மாற்றி அமைத்தல்


நாம் கணினியைப் பயன்படுத்தாதபோது கணினி மின் விரயத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் அழகான திரை தோற்றம் பெறவும் கணினி திரைக் காப்பான் (Screen Sever) பயன்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Screen Saver ஐ ஏற்படுத்திக் கொள்ளும் முறை பின்வருமாறு:





Screen Server என்ற Icon ஐ தெரிவு செய்வதன் மூலம் அருகில் உள்ள உரு தோற்றம் பெறும்.

அதில் காணப்படும் Screen Saver என்ற option இல் உள்ளவை பின்வருமாறு:






3D Text, Blank, Bubbles, Mystify, Photos, Ribbons

இவற்றில் 3D Text, Photos என்பவற்றில் எம்மால் பல மாற்றங்களை மேற்கொள்ள முடியும்.

அவற்றை ஒவ்வொன்றாக பார்ப்போம்.

Screen Saver என்ற 3D Text ஐ தெரிவு செய்வதன் மூலம் தோன்றும் உருவும் Setting என்பதனை தெரிவு செய்வதன் மூலம் தோன்றும் உருவும் காட்டப் பட்டுள்ளன. இரண்டாவது உருவில் Custom Text என்ற இடத்தில் எமக்குத் தேவையான பெயர்களை வழங்க முடியும். அதேசமயம், Resolution, Size, Rotation Speed என்பவற்றையும் கூட்டிக் குறைக்க முடியும்.






மேலும் அசைவின் வகையை Rotation Type என்ற பகுதியினால் மாற்றி அமைக்கலாம்.

அதேசமயம், அதனை Preview என்ற பொத்தானை தெரிவு செய்வதனால் கீழுள்ள உரு திரையில் ஓடு வதை அவதானிக்கலாம்.



Screen Saver என்ற பகுதியில் Photos ஐ தெரிவு செய்வதன் மூலம் தோன்றும் உருவும் Setting என்ப தனை தெரிவு செய்வதன் மூலம் தோன்றும் உருவும் காட்டப்பட்டுள்ளன. இரண்டாவது உருவில் Browse என்ற இடத்தை தெரிவு செய்வதன் ஊடான எமக்குத் தேவையான உருக்கள் உள்ள Fold (கோப்பை) ஐ தெரிவு செய்யலாம். அதன் மூலம் அந்த கோப்பில் உள்ள படங்கள் எமது கணினித்திரையில் நாம் பணி யாற்றாத வேலையில் மாறி மாறி ஓடுவதை அவ தானிக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய கல்வியாண்டில் திட்டமிட்டு வெற்றி பெறுவோம்

*ஜே.எம். அஸீம் ( நளீமி )*

புதிய ஆண்டு, புதிய துவக்கம் புதுப்புது கனவுகளோடு, புத்தம் புதிய திட்டங்களோடு களமிறங்கியிருப்பீர்கள். முதலில், உங்கள் திட்டம் வெற்றி பெற பிரார்த்திப்பதோடு, வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன், உங்கள் திட்டம் வெற்றி பெறுவதற்கு ஆரம்ப கட்டத்தில் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய கச்சிதமான ஐந்து அம்சங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன். அவையாவன:

1. தயார்படுத்தல்
2. தயார்நிலை
3. சிறந்த ஆரம்பம்
4. ஆரம்பித்ததைத் தொடர்தல்
5. நிகழ்காலத்தில் வாழுங்கள்

## 1. தயார்படுத்தல்

ஒரு மரவெட்டி பல வருடங்கள் ஒருவரிடம் வேலை செய்து வந்தார். அவரது சம்பளம் உயர்த்தப்படவே இல்லை. ஆனால், புதிதாக வேலைக்கு வந்த மற்றவரின் சம்பளம் மிக விரைவாக உயர்வடைந்தது. இதனால் முதலாமவர் முதலாளியிடம் முறையிட்டார். அதற்கு அவர், நீ ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எத்தனை மரங்களை வெட்டிக் கொண்டிருந்தாயோ அந்தளவுதான் இன்றும் வெட்டுகின்றாய். நீ அதிக மரம் வெட்டினால்தான் அதிக சம்பளம் தர முடியும் என்று கூறினார்.

அவர் தன்னால் முடியுமானவரை முயற்சித்தார். ஆனால், அவரால் வழமையான அளவுக்கு மேல் மரம் வெட்ட முடியவில்லை. இதனால் கவலையடைந்து மற்றவரின் மீது பொறாமைப்பட்டார். பின்னர், புதியவரிடம் சென்று, ''உன்னால் எப்படி அதிக மரங்களை வெட்ட முடிகின்றது?'' என்று கேட்டார்.

''நான் ஒவ்வொரு மரத்தை வெட்டியதும் சில நிமிடங்கள் ஓய்வெடுத்து எனது கோடரியைக் கூர்மைப்படுத்துவேன். நீ உனது கோடரியை எப்போது கூர்மைப்படுத்தினாய்?'' என்று கேட்டார் புதியவர்.

ஒவ்வொரு மரத்தை வெட்டுவதையும் ஒவ்வொரு வேலையாகக் கருதி அவற்றுக்குத் தயார்படுத்தி பணியாற்றியவரே வாழ்வில் முன்னேறியவர்.

வாழ்வில் முன்னேறியவர்கள் தங்களை உரிய முறையில் தயார்படுத்தியவர்களே! ஆபிரஹாம் லிங்கன் கூறினார்:

''ஒரு பெரிய மரத்தை வெட்டுவதற்கு எனக்கு 4 மணி நேர அவகாசம் தரப்பட்டால் கருவியைக் கூர்மையாக்கி, திட்டம் தீட்டி அதற்குத் தயாராவதற்கு 3 மணித்தியாலங்களை செலவிடுவேன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தந்த வேலைகளுக்கு தயார்படுத்துவது போலவே வாழ்வில் முன்னேற நாம் தொடர்ந்தேர்ச்சையாக எம்மைத் தயார்படுத்த வேண்டும். நாம் பெறும் பயிற்சிகள் மூலம் எம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

## 2. தயார்நிலை

''போருக்கு முரசறைந்த பின் வாள் தேடி உலைக்களத்திற்குச் செல்வதுபோல'' என முன்-தயார்படுத்தலின்றி, தயார் நிலையின்றி இறுதி நேரத்தில் தட்டுத் தடுமாறுபவர்களின் நிலையை வைரமுத்து வர்ணிக்கிறார்.

வாழ்வில் வெற்றி பெறத் துடிக்கும் நாம் வெற்றிக்கான தயார்நிலையிலேயே எப்போதும் இருக்க வேண்டும். தயார்நிலை என்பது எந்நேரமும் எதனை செய்யவும் எதனை எதிர்கொள்ளவும் தயாராக இருப்பதைக் குறிக்கும். முடியுமானவரை நாம் அனைத்தையும் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். தயார்நிலை என்பது ஒரு விழிப்பு நிலை; அவதானமான நிலை ஆகும். மனதளவிலும் உடலளவிலும் நாம் இத்தகைய தயார்நிலையில் இருக்க வேண்டும்.

## 3. சிறந்த ஆரம்பம்

ஒரு வேலையை சிறப்பாக ஆரம்பித்தால் அதுவே பாதி வேலை முடிந்ததற்கு சமம் என ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உள்ளது. ஓட்டப் பந்தய வீரர்களின் சிறந்த ஆரம்பமே அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கிறது.

''ஒரு வேலையை கனகச்சிதமாக செய்வதையே அல்லாஹ் விரும்புகிறான்'' என முஹம்மத் நபியவர்கள் கூறினார்கள். வெற்றிக்குத் தேவையான சிறந்த ஆரம்பத்தை பலர் தவறவிடுகின்றனர். இதனால் இறுதியில் வெற்றியே கைநழுவிப் போவதை உணர்வார்கள்.

## 4. ஆரம்பித்ததைத் தொடர்தல்

''வெற்றி பெற்றவர்கள் எல்லோருமே தம் வேலைகளைத் தள்ளிப் போட விரும்பி, பின்னர் சில காரணங்களால் அவ்வாறு தள்ளிப் போட முடியாமல் போனவர்கள்தான் என நான் உறுதியாக நம்புகிறேன்'' என்று ஷிவ் கெரா குறிப்பிடுகிறார்.

''இன்றே உங்களால் செய்ய முடிந்ததை ஒருபோதும் நாளை வரை தள்ளிப் போடாதீர்கள்'' என்றார் பென்ஜமின் பிராங்ளின்.

எது அவசியமோ அதைச் செய்யத் தொடங்குங்கள். பிறகு எது முடியுமோ அதைச் செய்யுங்கள். திடீரென்று உங்களால் முடியாதது என்று நினைத்துக் கொண்டிருந்தவற்றை செய்ய ஆரம்பிப்பீர்கள்.

ஒரு வேலையை ஆரம்பிக்காமல் இருப்பதற்கும், ஆரம்பித்த வேலையை தொடராமல் இருப்பதற்கும் ஆயிரம் சாக்குப் போக்குகள் சொல்லலாம். ஆனால், அவை எதுவுமே வெற்றிக்கு உதவாது என்பதை மனதில் இருத்துங்கள்.

## 5. நிகழ்காலத்தில் வாழுங்கள்

மாடு மேய்க்கும் இளைஞர்கள் மூவர் அதிகாலையிலேயே மேய்ச்சலுக்கு குதிரையில் சென்றுவிட்டனர். கொளுத்தும் வெயிலில் தறிகெட்டுத் திரியும் மாடுகளை மேய்த்ததில் மூவருக்கும் அகோரப் பசி. களைப்பும் பசியும் உயிரை வாட்டி வதைத்தன. அன்று முழுவதும் உணவின்றி நாள் கழிந்து மாலைநேரமானதும் வீடு திரும்ப ஆயத்தமாயினர். அப்போது அவர்களில் இருவர் தங்களுக்கு எவ்வளவு அகோரப்பசி என்பது பற்றியும் நகரத்துக்குத் திரும்பி தாங்கள் எவ்வளவு உணவுகளை உண்டு பசியாறப் போகிறோம் என்பது குறித்தும் பேச ஆரம்பித்தனர். மூன்றாவது இளைஞனோ அமைதியாக இருக்க, மற்ற இருவரில் ஒருவன், ''உனக்குப் பசியில்லையா?'' எனக் கேட்டான். அதற்கு அவன் அமைதியாக ''இல்லை'' என்றான்.

மாலையில் மாடு மேய்க்கும் பணி முடிந்து நகரத்தை அடைந்த மூவரும் ஓர் உணவகம் புகுந்து நிறைய உணவு தருமாறு வேண்டினர். பசி இல்லை என்று கூறிய இளைஞர் அவற்றை பேராவலோடு சாப்பிடத் தொடங்க மற்ற இருவரில் ஒருவன், ''ஒரு மணி நேரத்துக்கு முன்புதானே உனக்குப் பசியில்லை என்று கூறினாய்?'' என்று கேட்டான். அதற்கு அவன், ''ஆம், சொன்னேன். அப்போது பசியாக இருப்பதில் அர்த்தமில்லை. காரணம், அப்போது உணவில்லையே!''

திட்டமிடல் என்பது பொதுவாக எதிர்காலம் சார்ந்தது. ஆனால், நீங்கள் வாழும் நிகழ்காலத்தை மறந்து விடாதீர்கள். நிகழ்காலத்தில் வாழுங்கள். எதிர்காலத்தைத் திட்டமிடுங்கள். உங்கள் வெற்றியை யாரும் தட்டிப் பறித்துவிட முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம்.ஏ. ரியாஸ் மொஹமட் (B.A, PGDE)
கு/இப்/அல் ஹுதா மு.ம.வி, ரிதீகம

விரைவு - உயர்வு - துணிவு

# பந்தினால் பறிக்கப்பட்ட உயிர்கள்

1. **ஜோர்ஜ் சமர்ஸ் (25 வயது) 1870**

எம்.சி.சி. அணிக்கு எதிராக 1870 இல் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் நொட்டிங்ஹம்ஷயர் அணிக்காக துடுப்பெடுத்தாடிய இவரது தலையை பந்து பதம் பார்த்தது. சிறிது நேரத்தில் வழமைக்கு திரும்பிய அவர் வைத்தியசாலைக்கு செல்லவில்லை. ஆனால், இச்சம்பவம் இடம்பெற்று நான்கு நாட்களுக்கு பிறகு பக்க விளைவினால் இறந்து போனார்.

2. **அப்துல் அஸீஸ் (18 வயது) 1952**

கராச்சியில் 1952 இல் நடைபெற்ற உள்ளூர் கிரிக்கட் போட்டியின்போது இவரின் நெஞ்சுப் பகுதியை பந்து பதம் பார்த்தது. உடனடியாக வைத்தியசாலைக்கு விரையப்பட்டபோதிலும் அவரது உயிர் பிரிந்துவிட்டது.

3. **ராமன் லம்பா (38 வயது) 1998**

இந்தியாவின் முன்னாள் சர்வதேச கிரிக்கட் வீரரான இவர், டாக்காவில் 1998 இல் நடந்த உள்ளூர் போட்டியின்போது துடுப்பாட்ட வீரருக்கு மிக அருகில் களத்தடுப்பில் இருந்தார். இதனால் பந்து அவரின் தலையில் பட்டு மூளை பாதிப்பு ஏற்பட்டது. இதனால் இவர் மூன்று நாள் கோமாவில் இருந்து இறந்துவிட்டார்.

4. **ஷில்பிகார் பாட்டி (33 வயது) 2013**

2013 இல் நடைபெற்ற உள்ளூர் கிரிக்கட் போட்டியின்போது பந்து இவரது நெஞ்சை தாக்கியது. இவர் உடனே சரிந்து விழுந்தார். சௌக்கூர் மைதானத்தில் இருந்து உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டாலும் அவரது உயிர் பாதி வழியிலேயே பிரிந்துவிட்டது. இவர் பாகிஸ்தான் வீரராவார்.

5. **டரின் ரெண்டோல் (32 வயது) 2013**

தென்னாபிரிக்காவில் 2013 இல் நடைபெற்ற உள்ளூர் போட்டியின்போது ரெண்டோலின் தலைப் பகுதியை பந்து தாக்கியதை அடுத்து சுயநினைவின்றி தரையில் வீழ்ந்தார். இவர் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போதிலும் அவரது உயிர் ஏற்கனவே பிரிந்துவிட்டது.

6. **பிளிப் ஹியூஸ் (25 வயது) 2014**

2014 இல் நடைபெற்ற அவுஸ்திரேலிய உள்ளூர் போட்டியின்போது அபாட்டினால் வீசப்பட்ட பவுன்சர் பந்து இவரின் கழுத்துப் பகுதியை தாக்கியது. இதனால் இவர் நினைவிழந்து கீழே விழுந்தார். வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டாலும் சிகிச்சை பலனின்றி இவர் இறந்துவிட்டார்.

எம்.என்.எப். ருகையா
தரம் 10
அல்ஹிதாயா ம.வி. கொழும்பு

# 2016 ஆம் ஆண்டு 20-20 ஓவர் உலக கிண்ண கிரிக்கெட்

2016 ஆம் ஆண்டு 20-20 உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் நடைபெற உள்ளன. இப்போட்டிகளை 2016 ஆம் ஆண்டு மார்ச் 11 இல் தொடங்கி ஏப்ரல் 3 ஆம் திகதி வரை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. பிரிவு 1 இல் கடந்த டி20 உலக கிண்ணத்தை வென்ற இலங்கை, தென்னாபிரிக்க, மே.இ.தீவுகள், இங்கிலாந்து ஆகிய அணிகளுடன் தகுதிச் சுற்றிலிருந்து தகுதி பெறும் மற்றோர் அணியும்; பிரிவு 2 இல் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய அணிகளும் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் வென்று தகுதி பெறும் ஓர் அணி உட்பட மொத்தமாக 10 அணிகள் மோதவுள்ளன.

இதேவேளை, 2017 இல் உலக கிண்ணப் போட்டிகள் இங்கிலாந்தில் நடைபெற உள்ளன. 2016 ஆம் ஆண்டு பெண்களுக்கான 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டிகள் இந்தியாவில் நடைபெறுகின்றன. இப்போட்டிகள் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வரை நடைபெற உள்ளன.

# 2015 ஆம் ஆண்டுக்கான தடகள வீரர் யார்?

2015 ஆம் ஆண்டுக்கான தடகள வீரருக்கான விருதுக்கு சிறந்த குறுந்தூர ஓட்ட வீரர் உசைன் போல்ட்டின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த விருதுக்காக மேலும் இரு வீரர்களான எஸ்டன் ஈடன், கிருஸ்டியன் டெய்லர் ஆகியோரின் பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2015 ஆம் ஆண்டில் விளையாட்டு உலகம் பல மறக்க முடியாத சாதனைகளைக் கண்டது. புதிய சாதனைகள் பல படைக்கப்பட்டன; பழைய சாதனைகள் பல தகர்க்கப்பட்டன. கிரிக்கெட், டென்னிஸ், கால்பந்து என சகல விளையாட்டிலும் சாதனைகள் படைக்கப்பட்டன.**

### சரித்திரம் படைத்த குமார் சங்கக்கார

இலங்கை வீரர் குமார் சங்கக்கார உலகக் கிண்ண மற்றும் ஒரு நாள் போட்டி வரலாற்றில் முதல் முறையாக அடுத்தடுத்து நான்கு சதம் அடித்து அசத்தி புதிய உலக சாதனையை நிகழ்த்தினார்.

### அணித் தலைவராக கோஹ்லியின் சாதனை

டெஸ்ட் அணித் தலைவராக இந்தியாவின் விராத் கோஹ்லி சாதனை படைத்த ஆண்டு இதுவாகும். ஓர் அணித் தலைவராக அடுத்தடுத்து தொடர்ந்து நான்கு சதங்கள் போட்டு சாதனை படைத்தார். இப்படி அடுத்தடுத்து நான்கு சதங்களை அடித்த முதல் டெஸ்ட் தலைவர் என்ற சாதனை கோஹ்லிக்குச் சொந்தமானது.

### களத்தடுப்பில் அசத்திய ரஹானே

களத்தடுப்பில் புதிய சாதனை படைத்தார் ரஹானே. ஆகஸ்ட் 14 ஆம் திகதி இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியின்போது 8 பிடியெடுப்புக்களை நிகழ்த்தி அசத்தினார். கீப்பர் அல்லாத ஒரு களத்தடுப்பாளர் ஒரு டெஸ்ட் போட்டியில் அதிக அளவிலான பிடியெடுப்புக்களை நிகழ்த்தியது அதுவே முதல் முறையாகும்.

### பிரமிக்க வைத்த டி வில்லியர்ஸ்

தென்னாபிரிக்க சுப்பர் ஸ்டார் டி வில்லியர்ஸ் ஜனவரி 18 ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் வெறும் 31 பந்துகளில் சதம் போட்டு உலக சாதனை படைத்தார்.

### பெய்லின் உலக சாதனை

பெப்ரவிரி 24 ஆம் திகதி நடந்த உலகக் கிண்ணப் போட்டியின்போது ஸிம்பாப்வேயை போட்டுப் புரட்டி எடுத்து விட்டார் கிறிஸ் கெய்ல். 147 பந்துகளைச் சந்தித்த அவர் 215 ஓட்டங்களை குவித்து உலகக் கிண்ண வரலாற்றில் முதல் முறையாக அதிவேக இரட்டை சதம் அடித்து உலக சாதனை படைத்தார்.

### ஜெகோவிச் சாதனை

சேர்பியாவின் டென்னிஸ் வீரர் நொவெக் ஜெகோவிச் தனது 5 ஆவது அவுஸ்திரேலிய ஓபன் சம்பியன் பட்டத்தை வென்றார். ஓபன் எரா காலத்தில் 5 அவுஸ்திரேலிய பட்டங்களை வென்ற முதல் வீரர் ஜெகோவிச்தான்.

### 105 வயதில் ஓட்டப் போட்டியில் அசத்திய மியாஸாகி

இளைய தலைமுறை மட்டுமல்ல மூத்த குடிமகன் ஒருவரும் விளையாட்டில் வரலாறு படைத்தார். ஜப்பானைச் சேர்ந்த ஹிடோகிசி மியாஸாகி என்பவர் 105 வயதில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டு 42.22 வினாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்து அசத்தினார்.

### விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை



| விளையாட்டுப் போட்டி | வீரர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கிரிக்கட் | 11 |
| உதைப்பந்தாட்டம் | 11 |
| ஹொக்கி | 11 |
| வலைப்பந்து | 07 |
| கூடைப்பந்து | 05 |
| டென்னிஸ் – ஒற்றையர் | 01 |
| டென்னிஸ் – இரட்டையர் | 02 |
| கரப்பந்து | 06 |
| கரையோர – கரப்பந்து | 02 |
| ரக்பி | 15 |
| எல்லே | 16 |
| போலோ | 04 |
| கபடி | 07 |
| ரகர் | 15 |
| கிளித்தட்டு | 06 |
| எறிபந்து | 05 |
| பூப்பந்து – ஒற்றையர் | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## நானும் என் தாயும்



உன் உறக்கம் துறந்து – என்
உறக்கம் தந்தாய் – உன்
விழிகள் திறந்து – என்
இமைகளைக் காத்தாய்

இருளுக்குள் இருந்த என்னை
பத்து மாதங்கள் சுமந்து
உலகிற்கு பரிசளித்தாய்
என் உணவாய் இன்று – நீ
உன் உதிரம் தந்தாய்

பஞ்சு போன்ற கால்கள் நோகும்
என்று தன் மடியில் வைத்து
சுமந்தாய் – நான் நடக்கும் வரை
அன்பு என்னும் கடலில் மூழ்கியிருந்தாய்

முதுகெலும்பாய் எனக்கு
துணை நின்றாய் – வெற்றியின்போது
ஒரு தோழியாய் என்னுடன்
பகிர்ந்து கொண்டாய்

இன்பம், துன்பம் இரண்டையுமே
பக்குவமாய் ஏற்கும் மனோநிலையை
அன்று என் உணவாய் உன்
உதிரத்துடன் தந்ததால்
இன்று என் வெற்றிக்குப் – பின்
உன் பங்களிப்பு...

இமானா அப்துல் மஜீத்
க/அல் மனார் தே.பா.
ஹந்தஸ்ஸ

## இயற்கை வாழ்வு

பூக்களிடம் கற்றுக் கொள்
புன்னகை புரிவாய்!
நதியிடம் கற்றுக் கொள்
நன்மைகள் செய்வாய்!

மரங்களிடம் கற்றுக் கொள்
வள்ளலாய் வளர்வாய்!
மலையிடம் கற்றுக் கொள்
மாண்புடன் இருப்பாய்!

பறவையிடம் கற்றுக் கொள்!
உறவை இணைப்பாய்
விலங்கிடம் கற்றுக் கொள்
வீரமாய் நடப்பாய்!

பாத்திமா ஹனாதீ ஹப்ஸா
முஸ்லிம் மகளிர் அ.க.
கள்ளெலிய

## இலக்கு...

பறந்து பறந்து ஒரு நாளும்
பறவைகள் களைத்ததில்லை...
விரிந்து விரிந்து ஒருநாளும்
மொட்டுக்கள் வீழ்ந்ததில்லை...
எழுந்து எழுந்து ஒரு நாளும்
அலைகள் ஓய்ந்ததில்லை...
துளிர்ந்து துளிர்ந்து ஒரு நாளும்
இலைகள் காய்ந்ததில்லை

இத்தனையும் இப்படியிருக்க
இலக்கை மறந்து மறந்து
வாழ்ந்தது போதும் – புறப்படு
உன் வாழ்வில் யதார்த்தத்தை தேடி

மஸாஹிம் நவாஸ்
ஸாஹிரா கல்லூரி
குருணாகல்

## பேசும் கவிதை – இல 09



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த பத்து கவிதைகளுக்கு பரிசாக இறுவட்டுக்கள் (DVD) இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி:**
**2016 ஜனவரி 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதலிடம் பெற்ற கவிதை

### சரித்திரம் படைக்கலாம்

தடைகள் நிறைந்த வாழ்க்கை
கசப்பாயிருக்கலாம் - எனவே
நடைகள் மாற்றி நீ அதை
உடைத்து விடு
உன் விடாமுயற்சிக்கு
விடை காணலாம்
சதா பயிற்சிக்காய்
சரித்திரம் படைக்கலாம்...!

✍ ஏ.ஆர்.எப். பாத்திமா ரூப்அத் ஆரா
பாத்திமா பாலிகா ம.வி.
புத்தளம்

### இலட்சியப் பயணம்

சாதனைகள் படைக்க
பிறந்திட்ட - மனிதா
நீ சாதிப்பது இவ்வுலகை ஆட்டிப்ப
டைக்கவல்ல - அவை
மறுமையின் சாட்சிகளாய் அமையவே!
ஆற்றல்கள் அருள்பாலிக்கப்பட்ட மனிதா
அருள்பாலிக்கப்படுவது அகம்பாவம்
கொள்ளவல்ல - உன்
இறைவனை நெருங்கிடவே!

✍ நப்லா பானு
எருக்கலம்பிட்டி
மன்னார்

### முயற்சி

முடியும் வரை
முயற்சி செய்
முடியாது போனால்
பயிற்சி செய்

✍ எம்.ஆ.எப். ஸஹ்ரா
குபுக்கந்துரை
ராஜவெல்ல

### தயக்கம் ஏன்

தண்டவாளத் தடை தாண்ட
ரயிலுக்கு முடியுமென்றால்
அதை கண்டுபிடித்த மானிடா
உன் வாழ்க்கைத் தடைதாண்ட
இன்னும் ஏன் தயக்கம்...?

✍ சம்ரூத் ஏ. றஹ்மான்
கல்- எளிய

## பரிசுக்குரிய ஏனைய கவிதைகள்

### வெற்றி பெறுவோம்

ஆரோக்கியம் என்பது
அல்லாஹ்வின் அருள்
பேதமின்றி
விளையாட்டுடன்
ஒன்றுபட்டு
வெற்றி பெறுவோம்
புறப்படுங்கள்...

✍ ஜே.எம். முஸம்மில்
கோபாலபுரம்
நிலாவெளி

### ஜெயித்திடுவோம்

குறுக்கு கம்பம் - உன்னை
தொட்டிடாது - நீ
பக்குவமாய் இருந்திட்டால்
போட்டியில் - நீ
ஜெயித்திடுவாய்!!
பாவம் தன்னை விட்டு - நீ
பக்குவமாய் இருந்திட்டால்
மறுமையில் - நீ
ஜெயித்திடுவாய்!!

✍ எம். நுஸ்ரா
பல்லேகம
தெல்தோட்டை

### துணிவு ஓர் ஆயுதம்

வீரம் சொன்ன வேட்கையில்
வீழ்ந்திருந்த என் துணிச்சல்
தடைதாண்டிய பின்தான்
தவழ்ந்து சென்றது இலக்கிற்காய்

✍ ரிகாஸா பின்த் ராஸிக்
வஹுங்கொஹ
ஹன்தெஸ்ஸ

### உன் வெற்றிக்காய் விரைந்திடு

மாயமான இவ்வுலகில்
நீ யாருக்காக வாழ்கிறாயோ
அவருக்காக சிலதை
விட்டுக்கொடுத்தாலும்
எதற்காகவும்
உன் முயற்சியை
விட்டுக் கொடுக்காதே!
அதுவே உன் வெற்றியின்
முதல்படி...

✍ எம்.எஸ்.எப். சில்மா
முஸ்லிம் மகளிர் கல்லூரி
கல்-எளிய

### முயற்சியை கைவிடாதே!

மனிதா! உன்னை நீயே
பட்டை தீட்டு
இறைவன் உனக்களித்த
திறமை கண்டு
நாளையை உலகம்
உன் கைகளில்
இன்ஷா அல்லாஹ்...

✍ எம்.ஏ.எப். சமீஹா
வெலம்பொட

### விடா முயற்சி

நீ எங்கு சென்றாலும்
எங்கு வாழ்ந்தாலும்
முயற்சியை விட்டு விடாதே
சோம்பல் என்பது கல் போன்றது
முயற்சி என்பது
கண்ணாடி போன்றது
சோம்பல் எனும் கல்லால்
முயற்சி எனும் கண்ணாடியை
உடைத்து விடாதே!

✍ எம்.ஏ.எப். ரிகாஸா
கல்-எளிய

### வெற்றி நிச்சயம்

தடைகள் பல தாண்டினால்
வெற்றி நிச்சயம் - போட்டியில் மட்டுமல்ல
உன் வாழ்விலும்தான், தயாராய் இரு
தடைகள் பல உனக்காய் காத்திருக்கிறது

✍ நுபைஸா ஹாஸிம்
கொலதன
வெலிகாமம்

### முயற்சி செய்

முயற்சிதான் வெற்றியின்
முதற்படி என்றால் முதற்படி
அடைய நீ முந்நூறு முறை
தோற்றாலும்
முயற்சியை இழக்காதே!

✍ எம்.ஆர். ஆயிஷா
க. மதீனா தே. பா.
மடவளை பசார்

### சுவனம் நோக்கி செல்

உன்னால் முடியும் என்பதை
ஊர் அறிய செய்ய
உயரப் பாய்கிறாய்
உன்னால் முடியும்
உண்மை முஸ்லிமாய்
உன் சகோதரனை காத்து
சுவனம் செல்ல...

✍ ஏ.கே.ஏ. சாபித்
திகழி
ஏத்தாளை

### முன்னேறு

உந்தி எழுந்து...
உயர்வுக்காய்...
உன்னிப்பாய்...
உலகம் போற்ற...
உடன் முன்னேறு
கண்டிப்பாய் - வெற்றி
உன் வசம்
நாளைய விடியலில்!

✍ றிபாயா எம். முஸ்தபா
காத்தான்குடி - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையும் மாணவர்களின் பாதையும்...?

**ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)**
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology (Peradeniya)

கடந்த இதழில் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்களுள் மதுபானம் ஏற்படுத்தும் பாதிப்புகள், அதனைத் தூண்டும் காரணிகள் மற்றும் அதிலிருந்து விலகிக் கொள்ளும் வழிமுறைகள் தொடர்பாகக் கலந்துரையாடினோம். இந்த இதழில் போதைப் பொருள் வகையில் அடுத்த முக்கிய பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற புகைத்தல் தொடர்பாக விரிவாக நோக்குவோம்.

மாணவர்களின் கல்வி மற்றும் திறன்களைப் பற்றிப் பேசும் இந்தப் பக்கத்தில் புகைத்தலையும் அதனைத் தூண்டும் காரணிகளையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் பற்றி ஏன் பேசவேண்டும் என்பதற்கு ஏராளமான காரணங்கள் உண்டு. உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வறிக்கையின் பிரகாரம் இலங்கையில் கல்வி கற்கின்ற மாணவர்களுள் 13-15 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களில் 11% ஆனோர் புகைப்பவர்கள் என்றும் அவர்களுடைய கல்விச் செயற்பாடுகளில் பலவீனம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

கல்வி நடவடிக்கையில் மாத்திரமன்றி உடல், உள, சமூக, பொருளாதார நிலைகளிலும் பல ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் புகைத்தல் எதிர்காலத் தலைவர்களான மாணவர்களின் முன்னேற்றத்துக்கு ஒரு தடைக் காரணி என்ற வகையில் புகைத்தல் பற்றி இங்கு பேச முயற்சிக்கின்றோம்.

புகையிலையைப் பயன்படுத்தி பல்வேறு வடிவங்களில் தயாரிக்கப்படுகின்ற புகைப் பொருட்கள் காணப்படுகின்றன. பீடி, சிகரட் மற்றும் சுருட்டு போன்றவற்றை உதாரணங்களாக குறிப்பிடலாம். இவற்றுள் சிகரட் பாவனை இன்று மாணவர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. ஆகையால் மாணவர்களும் இளம் சந்ததிகளும் மோசமான விளைவுகளைச் சந்திப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதனால் சிகரட் தொடர்பாக சற்று விரிவாக நோக்குவோம்.

அன்புக்குரிய மாணவர்களே! சிகரட்டின் தோற்றம் மற்றும் அமைப்புப் பற்றி நீங்கள் அறிவீர்கள். சிகரட்டில் சுமார் 4000 இற்கும் அதிகமான இரசாயனப் பொருட்கள் காணப்படுகின்றன. இவற்றுள் 40 வகையான இரசாயனங்கள் மிக ஆபத்தானவை; அவற்றுள் 3 இரசாயனப் பொருட்கள் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. அவையான:

1. காபன் மொனோ ஒக்சைட் (CO): இது ஒரு வாயு. புகைக்கும்போது வேகமாக உறிஞ்சப்பட்டு குருதியில் கலந்து விடுவதுடன் உடலியற் தொழிற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வாகனங்களின் கழிவாக வருகின்ற புகையும் இந்த வாயுவைச் சேர்ந்ததாகும். இது அதிகமாக நுகரப்படும் போது மரணத்தை ஏற்படுத்தும்.
2. தார்: ஒட்டும் தன்மை கொண்ட கறுப்பு நிற பிசுபிசுப்பான திரவம். இது ஒரு வகைப் பெற்றோலியப் பொருளாகும். வீதிகள் அமைப்பதற்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. சிகரட்டில் காணப்படும் தார் உடற் சுகாதாரத்தைக் கடுமையாகப் பாதிக்கிறது.
3. நிகொட்டின்: புகையிலையில் காணப்படும் அடிமையாக்கும் தன்மை கொண்ட ஓர் இரசாயனம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிலையை எரிப்பதால் வரும் புகையை நுகரும்போது வரும் நிகொட்டினானது, மூளை யில் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது. பெரும் பாலான சிகரட்டுக்கள் 10 கிராம் நிகொட்டினைக் கொண்டுள்ளன. புகைக்கும்போது உள்ளெடுக் கப்படும் நிக்கொட்டினானது மூக்கு, வாய், ஈரல் மற்றும் இரத்தக் கலங்களில் ஊடுருவிச் செல்கி றது. இவ்வாறு இரத்தத் துணிக்கைகளில் ஊடுரு வும் நிகொட்டினானது 7 நொடிகளிலேயே மூளை யைச் சென்றடைந்து விடுகிறது.

மூளையைச் சென்றடையும் நிகொட்டினானது, மத்திய நரம்புத் தொகுதி மற்றும் பாவு நரம்புத் தொகுதிகளைத் தூண்டிவிடும் பல்வேறு இரசாய னங்களை விடுவிக்கக் கட்டளையிடுகிறது. இத னால் புகைக்கும் ஒருவரில் கிளர்ச்சி அதிகரிக்கும், இதயத் துடிப்பு மற்றும் குருதி அமுக்கம் என்பன அதிகரிக்கின்றன.



இவ்வாறு உயிர் கொல்லியான சிகரட்டைப் புகைப்பதால் புகைப்பவருக்கும் அவரைச் சு ற்றியிருக்கும் சமூகத்திற்கும் பல்வேறு வகையான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

1. புகைப்பதால் ஏற்படும் உடலியல் ரீதியான விளை வுகள்
   - புகைப்பவரின் வெளித்தோற்றத்தில் ஏற்படும் மாற்றங்கள்
   - முடியின் நிறம் மாற்றம் அடைகிறது.
   - கன்னத்தில் குழி விழுந்து முதுமைக் கோலம் ஏற்படுகிறது.
   - கண்பார்வை குறைவடையத் துவங்குவதுடன் கண் விகாரமடைந்து செழுமையற்றுப்போ கிறது.
   - மூக்கிலும் பாதிப்பு ஏற்பட்டு மணங்களை நுகரும் நுகர்ச்சித்தன்மை குறைவடைகிறது.
   - தோல் சுருங்கிப்போகும். இளவயதிலேயே வயதான தோற்றத்தை அடைவர்.
   - பற்களில் நிறமாற்றம், பல்லின் மேற்புறத்தில் அழற்சி ஏற்படும்.
   - உதடு காய்ந்து, கறுத்து அழகற்றுப் போகும். உதடுகளில் வடு விழும்.
   - துர்நாற்றம் வீசும்.

ஒரு மனிதனின் சிறந்த ஆளுமையை (Personality) வெளிக்காட்டுவதில் மனிதனின் வெளித்தோற்றத் துக்கு பாரிய பங்கிருக்கிறது. பாழாய்ப்போன சிகரட் டைப் புகைப்பதால் புகைப்பவரின் ஆளுமை கெட் டுப் போகிறது. இதனால் பிறரது அன்பு, அரவணைப்பு, நெருக்கம் என்பன அற்றுப்போவதுடன் பிறரைக் கவரும் நிலையும் கை நழுவி விடும். திருமணமான வராயின் கணவன் மனைவிக்கிடையில் சச்சரவுக ளும் பிளவுகளும் தோன்றவும் வாய்ப்பாய் அமை கிறது.

2. புகைப்பதால் இதயத் தொகுதிக்கு ஏற்படும் பாதிப் புக்கள்
   - தொடராகப் புகைப்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு புகைக்காதவர்களைவிட 70% அதிகமாகும்.
   - இவ்வாறு ஏற்படும் மாரடைப்பு இதயத்தின் இயக்கத்தை நிறுத்தி மரணத்துக்கு இட்டுச் செல்லும்.
   - புகைத்தல் உங்களுடைய இதயத்துடிப்பை அதி கரிப்பதுடன் இரத்த அழுத்தத்தையும் அதிகரிக் கிறது. இதனால் இரத்தக் குழாய்களை அடைக் கும் இரத்தத் துணிக்கைகளும் அதிகரிக்கின் றன.
   - இதற்குக் காரணம் புகைப்பதால் கொலஸ்ட் ரோலின் அளவு உடலில் அதிகரிப்பதாகும். கொலஸ்ட்ரோல் அதிகரிப்பதால் மாரடைப்பு மாத்திரமன்றி பக்க வாதமும் ஏற்பட வாய்ப்பு அதிகமாகும்.

இன்று மனிதனுக்கு மரணத்தை ஏற்படுத்தும் முக் கியமான 10 நோய்கள் தர வரிசையில் முதலாமிடத் தில் இருப்பது மாரடைப்பும் அதனோடு சேர்ந்த இதயத் தொகுதி நோயுமாகும். இந்த நிலைமைக ளுக்கு புகைத்தல் மிகப் பெரிய காரணியாக அமைந் துள்ளது என்பதை மறுக்க முடியாது.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்
வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில்,எம்.எம். முபாரக்

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

7, 9, 2, 8, 3, 5, 6, 4

1. கட்டத்தினுள் காணப்படும் ஒற்றை இலக்கங்களின் எண்ணிக்கை?
   i. 4 ii. 5 ii. 6

2. கட்டத்தினுள் காணப்படும் இரட்டை இலக்கங்களின் எண்ணிக்கை?
   i. 5 ii. 4 iii. 3

3. கட்டத்தினுள் காணப்படும் சதுர எண்கள் யாவை?
   i. 9, 6 ii. 4, 9 iii. 6, 8

4. கடிகார முகமொன்றில் செங்கோணத்தைக் காட்டும் நேரங்கள் யாவை?
   i. 9.00 மணி, 2.30 மணி
   ii. 3.00 மணி, 1.30 மணி
   iii. 3.00 மணி, 9.00 மணி

5. சபீக்கின் தற்போதைய வயது 8 ஆகும். அமீரின் வயது 16 ஆகும். சபீக்கின் வயது இருமடங்கு அதிகரிக்கும்போது அமீரின் வயது என்ன?
   i. 20 வயது ii. 22 வயது
   iii. 24 வயது

6. 10 மீற்றர் நீளமுள்ள கம்பியிலிருந்து 365 செ.மீ. கம்பித் துண்டு வெட்டி எடுத்தால் மீதமாகவுள்ள கம்பியின் நீளம் எவ்வளவு?
   i. 1235 செ.மீ ii. 6 மீ. 35 செ.மீ
   iii. 635 மீ

**பின்னங்களில் காணப்படும் வெற்றுக் கட்டத்திற்குப் பொருத்தமான இலக்கத்தை தெரிவு செய்க.**

7. $\frac{1}{4} = \frac{\quad}{20}$ i. 4 ii. 5 iii. 2

8. $\frac{2}{3} = \frac{6}{\quad}$ i. 9 ii. 12 iii. 10


9. குமார் பயணமொன்றின் 2/6 தூரத்தை சைக்கிளிலும் 1/6 தூரத்தை பஸ்ஸிலும் மிகுதித் தூரத்தை புகையிரதத்திலும் சென்றான். புகையிரதத்தில் சென்ற தூரம் எவ்வளவு?
   i. 2/6 ii. 3/6
   iii. 4/6

10. கீழே உள்ள உரோம இலக்கங்களை ஒழுங்கு முறையில் சரியாக எழுதினால் வரும் விடை யாது? 9, 11, 13, 15
    i. xi, ix, xii, xv ii. ix, xi, xiii, xv
    iii. ix, x, xiii, xv

11. 2 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களில் உள்ள நிமிடங்கள்?
    i. 120 நிமிடங்கள் ii. 110 நிமிடங்கள்
    iii. 140 நிமிடங்கள்

12. பத்து பேனைகளை ரூபா 140 இற்கு வாங்கி ஒரு பேனைக்கு 5 ரூபா இலாபம் வைத்து விற்றால் ஒரு பேனையின் புதிய விலை எவ்வளவு?
    i. ரூபா 20 ii. ரூபா 19
    iii. ரூபா 14

13. இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.





14. 100 கிராம் பருப்பின் விலை ரூபா 12 எனின் 750 கிராம் பருப்பின் விலை யாது?
    i. ரூபா 120 ii. ரூபா 110
    iii. ரூபா 90

15. 'பதினெட்டாயிரத்து முந்நூற்று ஒன்று' எனும் எண்ணில் உள்ள இலக்கங்களை பின்னாலிருந்து முன்னால் எழுதும்போது கிடைக்கும் எண் யாது?
    i. 10381 ii. 10831 iii. 10138


**தரப்பட்ட உருக்களில் உள்ள எண்கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.**

16.




i. 48 ii. 62 iii. 60


17.




ii. 40 ii. 50 iii. 30


AHARAM அகரம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**பின்வரும் படங்களுக்கு சரியான சொல்லை தெரிந்து கோடிடுக.**

18. 

தென்னங்கீற்று

தென்னங்கீட்டு


தென்னங்கீற்று

19. 

இளனீர்

இளநீர்

இலநீர்

20. 

பயற்றங்காய்

பைத்தங்காய்


பைற்றங்காய்

21. 

நட்சத்திரம்

நட்ச்சத்திரம்

நற்சத்திரம்


22. 




கோடாரி

கோடாளி

கோடரி

**பின்வருவனவற்றுள் நிறை குறைந்தது ?**

23.   

24.   

**பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**

அ) அறிஞர் கூறும் வார்த்தைகள்
ஆரம்பத்தில் கசப்பினும்
புரிந்து கொண்டு நடக்கையில்
அரிய தேனாய் இனிக்குமே

ஆ) தோல்வி அடைய நேரிடில்
துவண்டு போகலாகுமோ
தோல்விதானே வெற்றியின்
தொடக்கப்படிகள் ஆகுமே

25. தேனாய் இனிப்பது ?

i. பலா ii. அறிஞர் கூறும் வார்த்தைகள்
iii. வெற்றிகள்

26. மனிதன் துவண்டு போவது ?

i. வெற்றியினால் ii. தோல்வியினால்
iii. வார்த்தைகளால்

27. பாடலில் இடம்பெற்ற அறுஞ்சுவைகளுள் இரண்டு ?

i. உவர்ப்பு, துவர்ப்பு ii. கசப்பு, இனிப்பு
iii. புளிப்பு, கசப்பு


28. வெற்றியின் ஆரம்பப்படி ?

i. சந்தோஷம் ii. தோல்வி
iii. பயிற்சி

29. சொல் என்பதற்கு பாடலில் இடம்பெற்ற சொல் ?

i. புரிந்து ii. வார்த்தை
iii. துவண்டு

30. மேற்குறித்த உருவத்திற்கேற்ப பின்வரும் எக் கூற்று சரியானது ?



i. வட்டங்களின் எண்ணிக்கையைவிட முக்கோணிகள் குறைவாக காணப்படுகின்றன.

ii. முக்கோணிகளின் எண்ணிக்கையும் நீள் சதுரத்தின் எண்ணிக்கையும் சமமானதாகும்.

iii. நீள் சதுரத்தின் எண்ணிக்கையைவிட முக்கோணிகளின் எண்ணிக்கை கூடுதலாக காணப்படுகிறது.

31. 1500 கிலோ கிராம் தேயிலையில் எத்தனை 75 கிராம் பக்கற்றுக்கள் தயாரிக்கலாம்.

i. 12 ii. 60 iii. 20

32. 2 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களில் உள்ள நிமிடங்கள் எத்தனை ?

i. 120 நிமிடங்கள் ii. 140 நிமிடங்கள்
iii. 150 நிமிடங்கள்

33. இரட்டை எண், ஒற்றை எண் முறையே காணப்படும் விடையின் கீழ் கோடிடுக.

i. 734, 848 ii. 647, 550 iii. 700, 105

**44ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில்,எம்.எம். முபாரக்

**பின்வரும் கதையை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு காட்டில் ஒரு மான் கூட்டம் வாழ்ந்து வந்தது. அந்த காட்டுக்கு ஒரு வேடனும் வந்தான். அவன் மான்களை பிடிப்பதற்கு ஒரு தந்திரம் செய்தான். காய்களும் கனிகளும் நிறைந்த ஒரு மரத்தில் ஏறி அதன் கொப்புகளை ஆட்டினான். பழங்களும் காய்களும் மரத்தைச் சூழ விழுந்து சிதறின. இவற்றை மான்கூட்டம் உண்ண வரும். அப்போது நான் அதனைப் பிடித்துக் கொள்வேன் என வேடன் நினைத்துக் கொண்டான்.

அவன் நினைத்ததுபோல் மான்கூட்டம் வந்து கொண்டிருப்பதைக் கவனித்தான். ஆனால், அவை ஓர் இடத்திலே நின்றுவிட்டன.

முன்னால் வந்த அந்தக் கூட்டத்தின் பெரிய மான் பின்னால் திரும்பி, ''நண்பர்களே யாரும் அங்கே செல்ல வேண்டாம். இதில் ஏதோ சூழ்ச்சி தெரிகிறது. திரும்பி விடுவோம்'' என்றது. மான்கூட்டம் வந்த வழியே திரும்பிச் சென்றது. வேடனும் ஏமாற்றத்துடன் திரும்பினான்.

1. காட்டுக்கு வந்தவன் யார்?
2. உபாயம் என்பதற்கு மூன்றாம் பந்தியில் இடம் பெற்ற அதே கருத்தைத் தரும் சொல் யாது?
3. இக்கதைக்கு பொருத்தமான பழமொழி.
   - i. புள்ளிமான் துள்ளி விளையாடும்
   - ii. புத்திமான் பலவான்
   - iii. தன்வினை தன்னைச் சுடும்
4. முதற்பந்தியில் இருந்து எதிர்க்கருத்தை தரக்கூடிய இரு சொற்களை எழுதுக.
5. பெண் மான் பிணை போல ஆண் மான்?


**'அ' பகுதிக்கு பொருத்தமான விடைகளை 'ஆ' பகுதியில் இருந்து தெரிந்து அதன் குறியீடுகளை கட்டத்தினுள் இடுக.**

| | அ | ஆ |
|---|---|---|
| 6. | தோமஸ் அல்வா எடிசன் | A உயிர் எழுத்துக்கள் |
| 7. | பாரத நாடு | B மின்குமிழ் |
| 8. | மூதுரை | C பாரதியார் |
| 9. | பன்னிரெண்டு | D ஔவையார் |
| 10. | சிறுவர் பாடல் | E இந்தியா |

**முதல் படத்திற்கு பொருத்தமற்றதை கீறிடுக.**

11.  i.  ii. 

12.  i.  ii. 

13.  i.  ii. 

**சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.**

14. மகே சுது பூசா ..............................
15. கபுட்டா கலு பாட்டாய் ..............................

**ஆங்கில வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.**

16. This is my pen ..............................
17. My father's name Ruwan ..........................

**பெண்பால் தருக.**

18. நடிகன் ..............................
19. பிதா ..............................
20. மருமகன் ..............................
21. விடியற் காலையில் விடிவெள்ளியை காணக் கூடிய திசையானது?
    i. தென்திசை ii. கிழக்குத் திசை iii. மேற்கு திசை
22. சார்ல்ஸ் பபேஜ் என்பவருக்கு வழங்கப்பட்ட பட்டப் பெயர் என்ன?
    i. கணினியின் தந்தை ii. கணித மேதை iii. இணையத்தின் தந்தை
23. சீமெந்து உற்பத்தியில் பிரபல்யமான இரு நகரங்களாவன?
    i. கொழும்பு, காலி ii. புத்தளம், கண்டி iii. புத்தளம், காங்கேசன் துறை
24. இலங்கையில் முகமூடி உற்பத்திற்கு பிரபல்யமான நகரம்?
    i. கதிர்காமம் ii. காலி iii. அம்பலாங்கொடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. பங்கதெனிய பிரதேசம் பிரபல்யமானதற்குக் காரணமாவது?

i. ஓட்டுத் தொழிற்சாலை
ii. பீங்கான் தொழிற்சாலை
iii. சீமெந்து தொழிற்சாலை

26. இலங்கையில் 5 மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்?

i. தென் மாகாணம் ii. வட மாகாணம்
iii. கிழக்கு மாகாணம்

27. கடற் தொழிலில் பயன்படுத்தும் வீச்சுவலை என்பதால் விளங்குவது?

i. வலையை வீசி மீன் பிடித்தல்
ii. எல்லோரும் சேர்ந்து வலையை இழுத்து மீன் பிடித்தல்
iii. ஆழமான கடலில் வலையை போட்டு மீன் பிடித்தல்

28. கொடி வர்க்கத்தில் சேராத தாவரம்

i. பாகல் ii. கொடிதோடை
iii. கரட்

29. வடமேல் மாகாணத்தில் காணப்படும் மாவட்டங்கள்?

i. புத்தளம் மாவட்டம், சிலாபம் மாவட்டம்
ii. நீர்கொழும்பு மாவட்டம், புத்தளம் மாவட்டம்
iii. குருணாகல் மாவட்டம், புத்தளம் மாவட்டம்

30. காந்தம் பயன்படுத்தப்படும் ஒரு பொருள் யாது?

i. ஒலிபெருக்கி ii. மின்குமிழ்
iii. கடிகாரம்

31. இயற்கை அனர்த்தங்களில் ஒன்று.

i. சூறாவளி ii. வாகன விபத்து
iii. காடு அழித்தல்

32. அம்பாறை என்ற பிரதேசம் அமைந்துள்ள மாகாணம் எது?

i. வடமேல் மாகாணம்
ii. கிழக்கு மாகாணம்
iii. வட மாகாணம்

33. தோட்டத்தில் வேலி அமைப்பதற்கு பொருத்தமானது?

i. பூவரசு ii. வேம்பு
iii. கிளிசிறியா

34. பார்வை, கேட்டல் சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்ளும் சாதனம் எது?

i. வானொலி
ii. தொலைக்காட்சி
iii. ஒலிபெருக்கி

35. கலா ஓயாவை கட்டுவித்த மன்னன் யார்?

i. காசியப்பன் ii. தாதுசேனன்
iii. பராக்கிரமபாகு

36. அரசாங்கத்தினால் எமக்கு கிடைக்கும் இலவசமான சேவையானது?

i. நீர் ii. மின்சாரம்
iii. தபால் சேவை

37. தாவர பெருக்கத்திற்கு உதவும் பிராணி?

i. கிளி ii. எறும்பு iii. தேனீ

38. இரவு நேரத்தில் பூக்கும் பூ எது?

i. கடுப்புல் ii. செவ்வரத்தை
iii. தாமரை

39. தனது கால்களால் இரைகளை பற்றிப் பிடித்து தூக்கிச் செல்லும் பறவையானது?

i. பருந்து ii. கிளி iii. மைனா

40. அந்திமந்தாரை பூக்கும் நேரமானது?

i. மாலைநேரம் ii. பகல்வேளை
iii. காலைநேரம்

**அடுத்து வர வேண்டிய எண்ணை எழுதுக.**

41. 9099 :...................
42. 8199 :...................
43. 8999 :...................
44. 3.5 கிலோ கிராம் எத்தனை கிராம்?
45. 2.5 கிராம் + 300 கிராம் + 500 கிராம் = .............
46. கோலத்தை அவதானித்து இடைவெளியில் வர வேண்டிய எண்ணை எழுதுக.

47. குடை ஒன்றின் விலை ரூபா 450 ஆகும். தொப்பியின் விலை குடையின் விலையில் 3/5 பங்கு ஆகும். தொப்பியின் விலை என்ன?

i. ரூபா 270 ii. ரூபா 170
iii. ரூபா 27

48. இனிப்பு ஒருவருக்கு 3 வீதம் கொடுத்தால் 30 பேருக்கு கொடுக்கலாம். அவற்றை 5 வீதம் கொடுத்தால் எத்தனை பேருக்கு கொடுக்கலாம்?

i. 10 ii. 15 iii. 18

49. ஒரு வேலையை செய்ய 6 பேருக்கு 12 நாட்கள் தேவை எனின், அதே வேலையை 3 பேர் செய்தால் எத்தனை நாட்கள் தேவைப்படும்?

i. 12 நாட்கள் ii. 18 நாட்கள்
iii. 24 நாட்கள்

50. மீதி இன்றி 2 ஆல், 3 ஆல், 5 ஆல், 10 ஆல் வகுபடும் எண்களைக் கொண்ட தொகுதி?

i. 60, 100 ii. 90, 60 iii. 50, 60


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனது வாழ்வில் மறக்க முடியாத மழை நாள்'' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

**விடைகள்**

1. வேடன்
2. சூழ்ச்சி
3. ii
4. காய், கனி
5. கலை
6. B
7. E
8. D
9. A
10. C
11. i
12. ii
13. i
14. என்னுடைய வெள்ளை பூனை
15. காகம் கறுப்பு நிறம்
16. இது என்னுடைய பேனா
17. எனது தந்தையின் பெயர் ருவன்
18. நடிகை
19. மாதா
20. மருமகள்
21. ii
22. i
23. iii
24. iii
25. i
26. ii
27. i
28. iii
29. iii
30. i
31. i
32. ii
33. iii
34. ii
35. தாதுசேனன்
36. தபால் சேவை
37. தேனீ
38. கடுப்புல்
39. பருந்து
40. மாலைநேரம்
41. 9100
42. 8200
43. 9000
44. 3500 கிராம்
45. 3300 கிராம்
46. 43
47. i
48. iii
49. iii
50. ii

---

**41 ஆம் பக்கத் தொடர்...**

34. மிகுதியின்றி இரண்டினால் வகுக்கக் கூடிய எண்களைக் கொண்ட எண் தொகுதியின் கீழ் கோடிடுக.

i. 700, 500, 50 ii. 720, 444, 321
iii. 780, 107, 338

35. புத்தகம் ஒன்றின் விலை ரூபா 450. பயிற்சிக் கொப்பி ஒன்றின் விலை புத்தகத்தின் விலையில் 2/5 பங்கு. பயிற்சிக் கொப்பியின் விலை என்ன?

i. ரூபா 150 ii. ரூபா 180
iii. ரூபா 300

36. இடைவெளியில் வர வேண்டிய இலக்கத்தைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

23, 34, 45, 56, .......

i. 66 ii. 67 iii. 78

அட்டவணையை பூர்த்தி செய்க.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| பாடினான் | 37. ............... | பாடுவான் |
| 38. ............... | ஆடுகிறது | ஆடும் |
| வந்தீர்கள் | வருகிறீர்கள் | 39. ........... |

அடைமொழிகளுக்கு மட்டும் கோடிடுக.

40. திருமண வீட்டிலே வர்ண விளக்குகள் ஒளிர்ந்தன.
41. கொடிய பாம்பை கீரி கடித்துக் குதறியது.
42. தாரகைகள் நீல வானில் மின்னின.

ஒழுங்கமைக்குக.

43. ர்-மி-பௌ-ண
44. றா-க-ளை-ற்
45. து-வி-கு-க்-ள-த்-கு
46. வ-து-போ-ர-க்-கு-த்

பெயரும் வினையுமாக வரும் சொற்களுக்கு கோடிடுக.

47. பூட்டு, திறப்பு, கதவு
48. ஆமை, முயல், சிங்கம்
49. ஓடினான், நரி, பாய்

---

**விடைகள்**

2. ii
3. ii
4. iii
5. iii
6. ii
7. ii
8. i
9. ii
10. ii
11. iii
12. ii
13. 21 செ.மீ
14. ரூபா 90
15. i
16. iii
17. iii
18. தென்னங்கீற்று
19. இளநீர்
20. பயற்றங்காய்
21. நட்சத்திரம்
22. கோடரி
23. iii
24. i
25. ii
26. ii
27. ii
28. ii
29. ii
30. iii
31. iii
32. ii
33. iii
34. i
35. ரூபா. 180
36. ii
37. பாடுகின்றான்
38. ஆடியது
39. வருவார்கள்
40. வர்ண
41. கொடிய
42. நீல
43. பௌர்ணமி
44. கற்றாளை
45. குத்துவிளக்கு
46. போக்குவரத்து
47. பூட்டு
48. முயல்
49. பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எண்ணங்களின் வண்ணங்கள் - 06

## தலைப்பு: சந்தைக்காட்சி


### பரிசில்களை பெறும் சித்திரங்கள்



நாதியா பஷீர்
உடதலவின்ன
மடிகே



எம். மரியம் மனாசிர்
ஆமினா தே.பா.
மாத்தளை



எம்.ஆர். ஆபிஷா முனவ்வரா
கு/அல் ஹிதா மு.ம.வி.
ரிதீகம

### பாராட்டை பெறும் சித்திரங்கள்



எம்.ஜே. கதீஜா அனார்
தில்லையடி மு.ம.வி.
புத்தளம்



அப்ரா ரிகாஸா
முஸ்லிம் பெ.அ.க.
கள்-எளிய




எப். சப்னா நிஸவ்விர்
பெலந்த மு.வி.
அகலவத்த



எம்.ஐ. அஸ்மா
ஸாஹிரா ஆ.பா.
புத்தளம்



மிப்லா முஜிபுர் ரஹ்மான்
முஸ்லிம் பெ.அ.க.
கள்-எளிய



எப்.எம். ஆசியா
அல் ஹுஸ்னா மு.ம.வி.
தெல்தோட்டை



எப்.ஆர். சாஜிதா
அல் முஃமினாத் பெ.அ.க.
அகுரணை



எம்.ஆர். மும்தாஜ்
கு/கும்பன்ன
தம்பதெனிய



எம்.என்.எம். நிஸ்மா
க/தீனு அல் மனார் தே.பா.
ஹந்தஸ்ஸ



எம். பஸ்மா
அல் ஹிக்மா தே.பா.
தெல்தோட்டை



ஆர். லிசா
நிக/நம்புவாவ மு.ம.வி
நம்புவாவ



எம்.எஸ். ஆமிரா
க/பாத்திமா மு.ம.வி
வரகாமுர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிப் பாதையில்

ஐ.பீ.எச். பப்ளிகேஷனின்

# வெற்றிச் சுடர்

2015
O/L மாணவர்களுக்காக




**இஸ்லாமிக் புக் ஹவுஸ்**
77, தெமடகொட வீதி, கொழும்பு 09
தொலைபேசி: 011 2684851, 011 2669197
பெக்ஸ்: 011 2688102
இணையம்: www.ibh.lk

Hotline : 0115 925 935

# IBH PUBLICATION

77, Dematagoda Road, Colombo - 09 Tel: 0115 736098, 077 2518641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org